www.tamilarangam.net

# சஞ்சீவி

மலர் 30

# Chanchive

1995



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1995

# சஞ்சீவி

மலர் - 30

அட்டைப்படம்....
இது மலர்களின் காலம்

| பக்கம் | உள்ளடக்கம் |
|---|---|
| 3 | நோக்கு |
| 5 | புலம்பெயர்ந்தோர் குறித்து..........அமார்க்ஸ் |
| 11 | ஓ...மை....God.....வில்லியம் ரீச்சர்...சிறுகதை |
| 17 | மனவருத்தங்கள்......ஆதவன் |
| 20 | சுவிஸைவிட்டுப்போகமுடியாது... |
| 21 | நரியும் முயலும்- சிறுவர் கதை |
| 23 | இருதோணியில் கால்வைக்கலாமா-V.S.K.நாதன் |
| 28 | யுத்தக்கருப்பை, தூரம்....செளந்தர் |
| 33 | தெருக்கண்டதெரு.......முரளி |
| 38 | குறுக்கெழுத்துப்போட்டி |
| 40 | பண்டிதர்கள் பதில்சொல்லட்டும் |
| 41 | காத்திருக்கும்நேரங்கள் -சிறுகதை |
| 44 | சிகரங்கள் சிகரங்கள்.....கவிதை |
| 45 | போர்க்குற்றவாளிக்கு டென்மார்க்கில் தண்டனை |
| 46 | சிறப்பு ( சித்திரவதை ) முகாம்கள் |

தொடர்புகளுக்கு :

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holsterbro
Denmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நோக்கு

1989 தொடக்கம் 1995 வரையில் இடைவெளி நிறையவே.இருந்தும் சஞ்சீவி இன்று 30 இதழ்களைத்தான் வெளிக்கொணர முடிந்துள்ளது. இந்த முப்பதாவது மலரை சிறப்பிதழாக வெளியிடவேண்டுமென விரும்பியிருந்தும் பெரியளவில் எம்மால் முடியாமல் போய்விட்டது.

1989 நடுப்பகுதியில் கொல்ரப்போ தமிழ் டெனிஸ் நட்புறவுச்சங்கத்தின் செய்திப்பத்திரிகையாக ஆரம்பித்த சஞ்சீவி இன்று இன்னொரு பரிமாணத்துடன் முப்பதாவது இதழாக உங்கள் கையில் கிடைத்துள்ளது பல ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் பல சஞ்சிகைகள் வெளிவருகின்றன. ஆனால் டென்மார்க்கில் வாழும் தமிழ் மக்களுக்கென்றொரு பத்திரிகை நிரந்தரமாக வெளிவராதுபோனது பெரியதொரு குறைபாடே. இந்த மக்களுடைய தேவையினை கடந்த ஐந்து வருடங்களாக சஞ்சீவி ஓரளவு நிவர்த்தி செய்ததுடன் முப்பதாவது இதழ்வரை வளர்ச்சி பெற்றுள்ளது ஒரு சாதனை என்றுதான் கூறவேண்டும். இதுகூட வாசகர்களாகிய உங்கள் ஆதரவிலும், நல்லநண்பர்களின் ஒத்துழைப்பிலுமே முடிந்தது.

1994ம் ஆண்டுவரையில் தமிழ்டெனிஸ் நட்புறவுச்சங்கத்தின் ஒரு பகுதியாகவே இயங்கிவந்த சஞ்சீவி 1994 இல் இருந்து தனியொருகுழுவாக இயங்க ஆரம்பித்துள்ளது. சங்கத்தின்கீழ் இயங்கியவேளை சகலவிதமான பொருளாதாரப்பிரச்சனைகளையும் சங்கத்தினரே பொறுப்பேற்றிருந்தனர். இனிவரும்காலங்களில் சஞ்சீவிக்கு தங்களால் முடிந்த ஒருகுறிப்பிட்ட பணஉதவியை தந்துதவுவதாக கூறியுள்ளார்கள். இவர்களுடைய இந்த உதவி இல்லாவிடில் சஞ்சீவி, தொடர்ந்து வெளியிடமுடியாதநிலைதான் உருவாகும்.சஞ்சீவிக்கு கிடைக்கும் வாசகர்களின் சந்தாத்தொகை போதாமையும், வேறு எந்த உதவிகளும் (அரசு, நகரசபை) கிடைக்காமையும் காரணமாகும்.இந்தநிலையில் சஞ்சீவியை தொடர்ந்து வெளியிடுவது வாசகர்களாகிய உங்கள் கையில்தான் உள்ளது.

சஞ்சீவி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தேயிலைத் தோட்டத்திலே கொழுந்தெடுக்கும் கன்னி

மணியொன்று டாண்டாண்என் றடிக்கக் கேட்டாள்
மடிமீதிற் றவழ்கின்ற மகவைப் போட்டாள்
துணிவுடனே போகவென எழுந்து நின்றாள்
போவதற்குத் தாயுள்ளம் துணிந்தாற் றானே
பணியொன்று மணியொன்று போகவேண்டும்
பகவானே என்றேதோ வாய்க்குட் சொன்னாள்
தணியாத ஆவலுடன் மகவைத் தூக்கித்
தங்கைகையிற் கொடுக்குமுனந் தழுவித் தீர்த்தாள்.

போகிறாள்: போகவில்லைத் திரும்பு கின்றாள்
புதல்வியது குறுநகையைப் பார்த்து நெஞ்சம்
வேகின்றாள் என்கண்ணை இங்கே தாடி
என்கின்றாள் வாங்குகிறாள் அணைத்து விட்டாள்
ஏகுவதற் கெண்ணுகிறாள் மகவை ஈந்தாள்
எடுத்தஅடி வைக்குமிடம் நோக்கவில்லை
போகுமிடம் அறிந்தாளோ அதுவும் தேரேன்
போகிறாள் கால்காட்டும் வழியினூடே.

கொழுந்தெல்லாம் கூடையிலே கைகள் சேர்க்கும்
குன்றுகளுக் கவள்கால்கள் இழுத்துப் போகும்
அழுந்தமனம் பிள்ளையை விட்டகலவில்லை
பசிவேளை நண்பகல்என் றெண்ணுகின்றாள்
விழுந்தடித்து வருகின்றாள் பசியைத் தீர்க்க
விரும்பிமகள் தனைவாரி விழுங்கு கின்றாள்
குழந்தையுடன் கொஞ்சுகையிற் பசியு மேது
கொழுந்தெடுக்கப் பின்னேகும் வினைவு மேது.

(கிராம ஊழியன், பிரசுரம்: 1944)

கவிஞர் செ. கதிரேசபிள்ளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலம் பெயர்ந்தோர் குறித்துப் புரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள்

—அ. மார்க்ஸ்

பல்வேறு நெருக்கடிகள், அடக்குமுறைகள், அரசியல் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றிற்கும் ஊடாக ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும், போராடும் ஈழ மக்களுக்கும் பொதுவில் ஒரு ஆதரவான நிலை தொடர்ந்து தமிழகத்தில் நிலவி வருவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. அரசும் பத்திரிகைகளும் எத்தனை முயன்றும் இந்த நிலையை முற்றிலும் மாற்றியமைத்துவிட இயலவில்லை. இந்த உணர்வின் இன்னொரு பக்கமாக ஈழப் போராட்டத்தால் இடம் பெயர்நத தமிழ் அகதிகளுக்கு இயன்றவரை உதவிட வேண்டும் என்கிற மனநிலை தமிழ் மக்கள் மத்தியில் பொதுவில் நிலவி வருவதும் வரவேற்கத்தக்க ஒன்றுதான். மைய அரசும், தமிழக அரசும் பார்ப்பனப் பத்திரிகைகளும் ஈழத்தவர்கள் என்றாலே பயங்கரவாதிகள் ஆயுதம் தாங்கியவர்கள், கொள்ளையர்கள என்றெல்லாம் செய்தியைப் பரப்பிக் கொண்டே இருந்தபோதிலும் ஈழ அகதிகளை அவர்கள் விருப்பத்திற்கு மாறாகத் தமிழ் மணணிலிருநது வெளியேற்ற வேண்டும் என்கிற நிலையைத் தமிழ் மக்கள என்றுமே ஆதரித்ததில்லை. எனினும் ஒரு அய்யம், தயக்கம் தமிழ்மக்கள் மத்தியிலுண்டு போராட்டம் நடநது கொணடிருக்கும் போது இவர்கள் புலம்பெயர்ந்து வநது பாதுகாப்பாக இருத்தல் சுயநலமில்லையா? வெளிநாட்டிற்குச் சென்று சொகுசு வாழ்க்கை வாழ்வதை ஆதரிக்க முடியுமா? இந்தக் கேள்விகள் எழாமல் இல்லை.

எப்போதுமே களத்தில் நின்று போராடுகிறவர்கள் வணக்கத்துக்குரியவர்கள்தான். எனினும் போராட்டத்தின் விளைவாக இடம் பெயர்ந்தவர்களுக்கு அவர்கள் எந்தக் காரணத்தினால் இடம் பெயர்ந்திருந்த போதிலும் அடிப்படையான உரிமைகளையும் பாதுகாப்பையும் அளித்திடல் மனித நேயக் கடப்பாடுகளில் ஒன்று. பாதிக்கப்பட்ட எந்த ஒரு மனிதனுக்கும் பிற நாட்டில் புலம் பெயர்வதற்கும் தஞ்சம் கோருவதற்கும் அந்த அடிப்படையிலான பிற உரிமைகளைப் பெறுவதற்கும் உரிமையுணடு என்பதை உலகளாவிய மனித உரிமைப் பிரகடனமே ஏற்றுக் கொள்கிறது. அந்த வகையில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களின் நிலை குறித்து கவனம் செலுததவேண்டிய கடமை மனித . உரிமைகளில் அக்கறையுள்ள நம் எல்லோருக்கும் உண்டு.

புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்கள் இந்தியாவில் பாதுகாப்பாகவும் வெளிநாடுகளில் சொகுசாகவும் வாழ்கிறார்கள் என்கிற கருத்து சில தவறான தகவலகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நமது அகதி முகாமகளின் அவல நிலைகள, சிறப்பு முகாம்களில் இழைக்கபபடும் கொடுமைகள், அய்ரோப்பிய மறறும் வட அமெரிக்க அரசுகள் புலம் பெயர்ந்த தமிழர்களைக் கையாளும் நெறிமுறைகள் ஆகியவை குறித்த பல தகவலகள இங்கே மறைககப்பட்டுள்ளன. அவறறைத் தமிழக மக்கள மத்தியல் வெளிக்கொணாவது நமது கடமையாகிறது. இந்த நோக்கில் சில தகவல்கள:

**அகதிகளின் உரிமைகளுக்கான சர்வதேச சட்டங்களின் ஓட்டைகள.**

அகதிகள் பறறிய சட்டங்களை அரசுகள் உருவாக்கிக் கொள்வதறகான வழிமுறைகளை வகுப்பதறகுப் பயன்படுகிற சாவதேச் சட்டக்கருவிகள இரண்டு. அவை:

1) **அகதிகள் நிலை தொடர்பான சர்வதேச நகல உடன்பாடு (1951)**
2) **அகதிகள் நிலை தொடர்பான விருப்ப ஒப்பந்தம் (1967)**

இவை இரண்டுமே இரண்டாம் உலகப் போரை ஒட்டி இடம் பெயர்ந்த அய்ரோப்பிய அகதிகளைக் கணக்கில் கொண்டு உருவாக்கப்பட்டவை. அகதிகள் பற்றிய தெளிவான வரையறைகளோ, அகதிகள் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான கறாரான நெறிமுறைகளோ இவற்றில் இல்லை. கடந்த இருபதாண்டுகளில் அய்ரோப்பாவிலிருந்து அல்லது அய்ரோப்பாவிற்குள்ளேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழி ஏற்பட்டு விடுகிறது. புலப்பெயர்வைத் தடுக்கும் படியான கொள்கைகளை மேலை நாடுகள் அதிக அளவில் நிறைவேற்றத் தொடங்கிய பின்பு இந்த ''வெளியேற்றாக்'' கொள்கையை ஏற்கெனவே உள்ளே நுழைந்தவர்களுக்கு மட்டும்தான் பிரயோகிக்க முடியும் என இந்நாடுகள் வாதிடுகின்றன. எனவே எல்லைக்குள் நுழையவே இயலாதவாறு கடும் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, நுழைபவர்கள் விரட்டியடிக்கப்படுகின்றனர். மேற்குறிப்பிட்ட 33ம் பிரிவு உள்ளே நுழைந்தவர்களுக்கு மட்டுமின்றி நுழைய முற்படுபவர்களுக்கும் பொருந்தும் என்கிற மனித உரிமை இயக்கத்தினரின் கருத்துக்கும் அய்ரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் செவிசாய்ப்பதில்லை. உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தின் 14ம் பிரிவு,

> ''துன்புறுத்தப்படுதலுக்கு எதிராக யாரொருவருக்கும் பக்கத்து நாடுகளில் புகலிடம் தேடவும் அனுபவிக்கவும் உரிமை உண்டு''

எனக் கூறுவதற்கு இவ்வாறு எல்லையிலேயே துரத்தி அடிப்பது எதிராக உள்ளதே என அவர்கள் கவலைப் படுவதில்லை. எல்லையில் தெரியாமல் நுழையும் முயற்சியில் உயிர் பறிகொடுத்த தமிழர்கள் எத்தனையோபேர். சமீபத்தில் கூட சென்ற ஆகஸ்டு 27ம் தேதி அன்று இவ்வாறு போலந்து— ஜெர்மனி எல்லையிலுள்ள 'நைச' என்னும் நதியைக் கடந்து தெரியாமல் உள்ளே வர முயன்ற 27 தமிழர்களில் பலர் நதியில் அடித்துச் செல்லப்பட்டு இறந்துள்ளனர். பல நாட்களுக்குப் பிறகு எட்டு சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஜெர்மனிக்கு புலம் பெயர்ந்து வரும் யாரொருவரும் இடையில் ஏதாவது ஒரு நாட்டில் 24 மணி நேரத்திற்கு அதிகமாக தங்க நேர்ந்திருந்தால் அவர்களைப் பிடித்து அந்த நாட்டிற்கு திருப்பி அனுப்பும் வழக்கமும் மேற்கொள்ளப்படுகிறது. 1987இல் பிரிட்டனின் ஹீத்ரு விமான நிலையத்தில் வந்திறங்கிய 58தமிழர்களை சில நிமிட விசாரணைக்குப் பின்பு வங்க தேசத்தின் வழியாக வந்தவர்கள் என்பதால் அங்கே திருப்பி அனுப்ப பிரிட்டிஷ் அரசு முயற்சித்தது. மனித உரிமை இயக்கத்தவர்கள் நீதிமன்றத்தை அணுகி தடைவாங்கி அவர்களில் சிலரைக் காப்பாற்றினர். இப்படி நிறைய எடுத்துக்காட்டுச் சொல்லலாம்.

1951 உடன்பாடு அகதிகள் பற்றிய வரையறையைச் செய்திருந்தபோதிலும் எவ்வாறு ஒருவரை அகதி என நிர்ணயிப்பது என்பதற்கான வழிமுறைகள் எதையும் சொல்லவில்லை. அய்க்கிய நாடுகளில் அகதிகள் உயர் ஆணையம் சில நெறி முறைகளை வகுத்திருந்தாலும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் எதுவும் கையெழுத்திட்டுள்ள நாடுகளுக்குக் கிடையாது. இவற்றையெல்லாம் மீறி உள்ளே நுழைந்தவர்களை வெளியேற்றாத போதும் அவர்களுக்கு அகதி அந்தஸ்தை இந்நாடுகள் வழங்குவதில்லை. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் ஆரம்பத்திலிருந்தே இந்நிலையை எடுத்து வந்தன என்பதை முன்பே குறிப்பிட்டோம். பிற நாடுகள் தொடக்கத்தில் ஒரு சிலருக்கு அகதிகள் நிலை வழங்கியதென்றாலும் 1985க்குக் பிறகு அவையும் அமெரிக்கா— பிரிட்டன் போலச் செயல்படத் தொடங்கி விட்டன.

அகதிகள் நிலை ஏற்கப்பட்டால் அதன் மூலம் புலம் பெயர்ந்தவர்கள் கல்வி, வேலை வாய்ப்பு. நீதிமன்றங்களை அணுகும் உரிமை, பாஸ்போர்ட் பெறும் உரிமை போன்றவற்றைப் பெறுகின்றனர். இவற்றைத் தடுக்கும் நோக்குடன் மேலை அரசுகள் புலம் பெயர்ந்தவர்களுக்கு **அகதிகள் அந்தஸ்தை மறுக்கின்றன.** அகதிகள் நிலை வழங்குவதற்குப் பதிலாக ''தங்குவதற்கான விதிவிலக்கான அனுமதி'' (Exceptional Leave to Remain) என பிரிட்டனிலும், நெதர்லாந்தில் 'பி— நிலை' பெற்றவர்கள் எனவும், ஸ்விட்சர்லாந்தில் தற்காலிக அனுமதி (Annual Resident ) எனவும் பலவாறான பெயர்களில் இவர்கள் அகதிகளுக்கான உரிமைகளும் இல்லாமல் தங்க நேரிடுகிறது. அகதிகளாக அங்கீகாரம் பெற்று வாழ்வதென்பதே இரண்டாம்தர வாழ்க்கைதான். அகதிகளிலும் இரண்டாம் தரமான வாழ்க்கை என்பது இன்னும் கீழான ஓர் வாழ்க்கையை வாழ்வதுதான். அய்ரோப்பாவில் வசிக்கும் புலம் பெயர்ந்த தமிழர்களில் பெரும்பாலோர் இத்தகைய கீழான நிலைகளில் வசிப்பவர்கள்தான்.

கையெழுத்திட்டுள்ள நாடுகளில் சில சர்வதேச உடன்பாடுகளும் பிரகடனங்களும் அளித்துள்ள பல நெறிமுறைகளுக்கும் எதிராகவே பல சட்டங்களை சமீபத்தில் இயற்றியுள்ளன. 1951ம் ஆண்டு உடன்பாட்டின்படி [பிரிவு 31 (1)] உயிருக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பில்லாமல் ஓடி வந்தவர்களை பாஸ்போர்ட் விசா முதலியவை இல்லையென தண்டிக்கக் கூடாது பொய்யான ஆவணங்களைக் கொண்டு வந்திருந்தால்கூட அதற்காக அவர்களைப் பொய் ஆவணங்கள் தயாரித்த குற்றத்தில்தான் தண்டிக்கலாமே யொழிய, அவர்களுக்கு அகதிகள் நிலையை மறுக்க முடியாது என்பது சட்ட நிபுணர்களின் கருத்து. இந்த அடிப்படை நீதி நெறிமுறைகளுக்கு மாறாக 1985ம் ஆண்டு தொடங்கி பிரிட்டிஷ் அரசு ஈழத் தமிழர்கள் விசா கொண்டுவர வேண்டுமென வற்புறுத்தியது. அதனையும் மீறி அகதிகள் வரும் நிலையைத் தடுப்பதற்காக 1987ம் ஆண்டு **''அழைத்து வருவோர் கடப்பாட்டுச் சட்டத்தை''** (Carr·ers Liability Act) நிறைவேற்றியது சரியான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆவணங்கள் இல்லாமல் பயணிகளை அழைத்துவருபவர்களை இச் சட்டத்தின் மூலம் கடுமையாகத் தண்டிக்க முடியும். அமெரிக்காவும் இதே போல சில தனித்துவமான சட்ட விதிகளை அகதிகளுக்கு எதிராக இயற்றியுள்ளது.

உள்ளே நுழைந்தவர்களை வெளியேற்றாமல் இரண்டாம் தரமாமகவாவது வைத்துக் கொள்வது என்கிற நிலையையும் கூட அய்ரோப்பிய நாடுகள் சமீப காலமாகக் கைவிடத்தொடங்கியுள்ளன. நெதர்லாந்தும் சுவிட்சர்லாந்தும் 1984ல் இலங்கையில் நிலைமையைக் கணித்து' வருவதற்காக குழுக்களை அனுப்பின. வடக்கில் நிலைமை மோசமென்றாலும் தெற்கில் அமைதி நிலவுகிறது என அக்குழுக்கள் அறிக்கை சமர்ப்பித்தன. எனவே ''நாட்டுக்குள்ளேயே மாற்றுத் தங்குமிடங்கள்'' (Internal Flight Alternative) உள்ளன என்கிற விவாதத்தை முன் வைத்து ஈழத்தமிழர்களை வெளியேற்ற இவ்விரு அரசுகளும் முனைந்தன. மனித உரிமை இயக்கத்தவர்களின் தலையீட்டின் விளைவாக இந்த முயற்சிக்கு தற்காலிகமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. எனினும் சமீபத்தில் சுவிட்சர்லாந்து அரசு ஆண்டிற்கு 2500 தமிழர்களை வெளியேற்றுவது என முடிவு செய்து முதற்கட்ட நடவடிக்கைகளைத் தொடங்கிவிட்டது.

மொத்தத்தில் அகதிகளாக நுழையக்கூடிய சாத்தியங்கள் முற்றாக மறுக்கப்பட்ட நிலை ஒரு புறம்; சட்டப்படி அகதி நிலை வழங்கப்படாததன் விளைவாக வரையறைப்படி அகதிகளாக இருப்பவர்களும் கூட அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டு அல்லாடுதல் இன்னொரு புறம். அகதி உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதன் விளைவாக அய்ரோப்பாவில் வசிக்கும் தமிழர்கள்,

கல்வி உரிமை,

வேலை/தொழிற்சங்க உரிமைகள்,

சட்ட உரிமைகள்,

எதுவுமின்றி அல்லலுறுகின்றனர். சட்ட விரோதமாக முகாம்களில் அடைத்துவைக்கப்படுகின்றனர். சமூகப் பாதுகாப்புகள் மறுக்கப்படுகின்றன. பாசிஸ்டுகளின் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். பேப்பர் போடுவது ரெஸ்டாரண்டுகளில் தட்டு கழுவுவது போன்ற வேலைகள் மட்டுமே தமிழர்களுக்கு வழங்கப்படுகின்றன.

### இந்தியாவில் ஈழத் தமிழ் அகதிகள்

தமிழகத்தில் வசிப்பவர்களாயினும் இங்கேயுள்ள முகாம்களின் நிலை நம்மில் பலருக்குத் தெரியாது. இது குறித்து விபரமான கட்டுரைகள் இம் மலரில் இடம் பெற்றுள்ளன. த. நா. கோபாலன் எழுதி இந்திய-இலங்கை நட்புறவுக் கழகம் வெளியிட்டுள்ள 'இலங்கைத் தமிழ் அகதிகள்' என்னும் சிறு நூலிலும் நிலைமைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

அகதிகள் பிரச்சினையை அணுகுவதற்கான சரியான நெறிமுறை மனித உரிமைச் சட்டம் தான். சொந்த நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுவதன் விளைவாகவே மக்கள் அகதிகளாக வெளியேறுகின்றனர். அப்படி வெளியேறி வந்தவர்களுக்கு புகலிட நாட்டில் இன்னும் மோசமாக மனித உரிமைகள் மறுக்கப்படுவது மிகப் பெரிய அவலம். தனி நபர்களது மனித உரிமை மீறல்களை எதிர்த்து நிற்பது எத்தனை அவசியமோ, அத்தனை அவசியம் ஒரு மனித குலப் பிரிவைச் சேர்ந்தவராக இருப்பதற்காகவே மனித உரிமை மீறப்படுகிற கொடுமையை எதிர்ப்பதும். ஈழத்தமிழராய் பிறந்த காரணத்தினாலேயே இன்று அவர்களைச் குற்றப் பரம்பரையினராக இந்திய அரசும் தமிழக அரசும் நடத்துவதை மனித உரிமைகளில் அக்கறை உள்ளவர்கள் என்கிற வகையில் எதிர்த்து நிற்பது நமது கடமையாகிறது. அகதிகள் பிரச்சினை உலகளாவிய ஒன்றாயினும் தமிழர்கள் என்கிற வகையில் நமது கரிசனம் ஈழத் தமிழர்களின் அவலங்களுக்கு எதிராகத் தொடங்குவது அவசியமாகிறது.

இதன் முதற் கட்டமாக ஈழத் தமிழ் அகதிகளின் உண்மை நிலைகுறித்த புரிதலை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதும் அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சினையில் அக்கறை கொள்ளும் வண்ணம் அழுத்தம் கொடுப்பதும் அவசியமாகிறது. உலக அளவில் பல்வேறு நாடுகளில் வதியும் ஈழ அகதிகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கான உதவிகள் மேற்கொள்வதும், அவர்களது பிரச்சினைகளில் அக்கறைகாட்டுவதும், உலகளாவிய அளவில் பாசிச எதிர்ப்பு சக்திகளுடன் இணைந்து நின்று ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதும் இன்று நமது உடனடிக் கடமைகளாகின்றன.

---

## நூல் அறிமுகம்:

ககம்

Kakam

வெளியீடு:

tuli publikation
Baunehøjen 35
3320 Skaevinge
Denmark.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பி ற ரை யு ம் மா ற் ற இ ட ம் பா ர் க் கு து

நிலைமாறிய கூட்டம் ஒன்று இன்று
தடம் மாறுது
அது மாறியதுமட்டுமன்றி பிறரையும்
மாற்ற இடம் பார்க்குது.

குழலோடு இசை கேட்டு
குலத்தோடு கோவில் வலம் வந்து
மடிஏந்தி வரம் கேட்டு
நாதஸ்வரத்தோடு இறைவன், அருள் கேட்ட
ப ம் குடி இன்று தனை மாற்றி
பிறரையும் மாற்ற இடம் பார்க்குது.

புது தேவன் பிறந்தாலும்
புதுமைகள் வளர்ந்தாலும்
நமத ன்ை ன நமக்கென்ன பழியினை செய்தான்
பாரெங்கும் பரந்தாலும் அங்கு
எம் பாதங்கள் பதிந்தாலும் நமக்கென்ன
இறைவன் பழியினை செய்தான்?

விழியாக தமிழ் மொழியாக கோவில்
வழியாக வந்த இறைவன் எமக்கு
கலையாக கைவண்ண சிலையாக தாயாக நின்று
இதுவரை அருள்தான் தந்தான்.

புரியாத புதிராக புதுமையை
நாடி நிலைமாறிய கூட்டம் ஒன்று
தடம் மாறுது அது தனைமாற்றியது மட்டுமன்றி
பிறரையும் மாற்ற இடம் பார்க்குது.


திருமலை செ.விஸ்வநாதன்.

சஞ்சீவி 30

www.tamilarangam.net



# ஓ..மை....GOD.......
# வில்லியம் ரீச்சர் வரப்போகிறா!



———————————பூர்ணிமா

கோழி இறகுப்போர்வையோ என்னஇறகுப்போர்வையோ அதை முழங்காலுக்குக் கீழே தள்ளினேன்.இந்த வின்ரரிலும் லேசாக வியர்க்கத்தொடங்கியது. ஆயினும் மெல்லிதான ஒரு துணியினால்கூட போர்த்தாவிடில் எனக்குநேரே உள்ள திறந்த குளியலறை யன்னலால் வரும் குளிர் ஏதும்நோயைத்தந்துவிடுமே. மெல்லியதுணியால் போர்த்திக்கொண்டு புரண்டு படுத்தும் ....ம்கும்.....தூக்கம் வரும் வழியைக்காணோம். "My God" ..கடைசியில் வில்லியம் ரீச்சர் இலங்கையிலிருந்து வரப்போகிறா ...." அதுவும் என்னிடம் வந்துநின்று தன் பழையமாணவிகளைப் பார்க்கப்போகிறாவாம்.... இந்த நினைவு என் தூக்கத்தை விரட்டியடித்து உடலை வியர்க்கச் செய்யுது.

⁂⁂

8 மணிக்கு வெள்ளையூனிபோம், பச்சை டை, கறுப்பு றிப்பன், வெள்ளைச்சப்பாத்து சகிதம் வீட்டுப்படலையை புத்தகக்கட்டுடன் தாண்ட அர்ச்சனா சரியாக பாதையில் வந்துசேருவாள்.இருவரும்சேர்ந்து கதை அளந்தபடியே பாடசாலையை அடைவோம். அர்ச்சனா, கங்கா, யூலியா, நர்மதா நான் 5பேரும் இடைவேளையின்போது சந்திப்போம். குறுகிய இடைவேளையோ, சாப்பாட்டுஇடைவேளையோ கம்பனிலிருந்து கட்டுத்தறிவரை, சிவாஜி – அமிர்தாபச்சனிலிருந்து காந்தி நேருவரை, சமையலிலிருந்து சடைப்பின்னல்வரை சகலதும் அலசிஆராய்வோம். எதிர்காலஇலட்சியங்கள்,எமது கனவுகள்,அன்றாடசம்பவங்கள் எதுவுமே தவறியதில்லை எமது வெள்ளையூனிபோமின் மடிப்புக்களைக்கூட அழகாக அயன்பண்ணி அதன்மடிப்புக்குலையவிடாது சுற்று வோம். வெவ்வேறு பிரிவு வகுப்புக்களானாலும் நடைஉடை பாவனைகளில் ஒரே மாதிரியும் எல்லோரையும் கவரும்படி "பளிச்"சென்று இருந்தோம்.

சஞ்சீவி 30

www.tamilarangam.net



∴∴

அன்று புதிதாக லில்லி அக்கா தைத்த யூனிபோமைபோட்டுப்பார்த்தேன். முழங்காலுக்கு கீழே மிக நீட்டம். எனக்குப்பிடிக்கவேயில்லை. இதென்னடாதொல்லை....என்று அதைமுழங்காலுக்கு மேலே இருக்க மடித்துத் தைத்துவிட்டு ஒவ்வொரு மடிப்பாக அயன்பண்ணி இரட்டைப்பின்னலைக் காதோடு பின்னி மடித்து கறுப்புரிப்பனால் வண்ணத்துப்பூச்சி மாதிரிக்கட்டிக்கொண்டு பாடசாலைக்குப்போனேன். பாடசாலைக் கேட்டில் புகும்போதே தூரத்தில் வில்லியம் ரீச்சர் ஆசிரியர்கள் அறைவாசலில் நிற்பது தெரிந்தது.

"அடியே கவுணை மடித்துத்தைத்தது மிககட்டையாகத்தெரியுதா? பயமாகஇருக்கடி ஆகலும்கட்டை என்றால் அவவுக்குப் பிடிக்காதே "......என்றபடி அர்ச்சனாவுடன் இணைந்து என்னை மறைத்தபடி நைசாக ஆசிரியர்கள் அறையைத்தாண்டவும் .. "பூர்ணிமா இங்கைவாரும்...." என வில்லியம்ரீச்சர் ராகத்தோடு அழைக்கவும் சரியாக இருந்தது.மனசுக்குள்ளே "திக்" என்றது. இரகசியமாக "தொலைந்தது"...என்றபடி மிக அடக்கமாக ரீச்சரை நெருங்கினேன். "என்ன பூர்ணிமா இப்படி கட்டையாக இருக்கே கவுண். இது கட்டைதானே?" என்றா.சம்மதிப்பதாக தலையைஆட்டினேன். " "நாளைவரும்போது கீழே இறக்கித்தைத்துவிடும் ..என்ன" என்றா.நான் "ஓம் ரீச்சர்" எனபதுபோல தலையை ஆட்டினேன். "நீர் போகலாம்" என்றா. வேகவேகமாக அர்ச்சனாவை "கவுணை அவிழ்த்து நீட்டி தைக்கட்டாமடி "எனறபடி சோர்ந்துபோய் சேர்ந்து வகுப்பை அடைந்தோம். நான்லேசில் பிழைவிடமாட்டேன் இப்படி யாரும் என்னைக்குறைகூறுவதும் எனக்குப்பொறுக்கமுடியாது. அடுத்தநாளே சட்டையை அவிழ்துத்தைத்துவிட்டேன். வில்லியம் ரீச்சர் என்னைக்கண்டபோது "நல்லபிள்ளை" என கண்களால் முகபாவனையால் கூறுவதுபோல அன்பொழுகப்பார்த்தா. நானும் புன்னகைத்தபடி தலையைக்குனிந்து சென்றேன்.

வில்லியம்ரீச்சர்தான் எமது பாடசாலை டிசிப்பிளின் தலைவி. பாடசாலையின் கட்டுப்பாடு பழக்கவழக்கம், ஒழுக்கம் சகலதும் அவவின் கையில்தான்.எமதுநாட்டு கலாச்சாரத்தின்-படி தாய்தந்தையரின்பின் ஆசிரியர்தானே, அதனால் அமதுவாழ்வின் டிசிப்பிளின் தலைவியே அவதான், என்றமுறையில் அல்லவா நாம் வாழ்ந்தோம்.எமதுநினைப்பும் ......ஏன் எனது நினைப்பும் அதுதானே.

சும்மா சொல்லக்கூடாதுஒவ்வொருகிழமையும் நடக்கும் ஒன்றரை மணிநேர டிசிப்பிளின் வகுப்பில் ஒவ்வொரு தலைப்பிலும் அழகான போதனைகள் தருவா. எத்தனை ஆலோசனைகள், வழிமுறைகள். அத்தனையும் மணியானவை.எமதுவாழ்வுக்கும் வழிகாட்டிகளே. ஒவ்வொருதேவை விசேடங்கட்கு எப்படியான உணவுவகைகள் பரிமாறலாம், எப்படியான ஆடைஅணிகள் அணியலாம், எப்படியான பரிசுப்பொருட்களைக்கொடுக்கலாம், தொலைபேசியில் மக்களுடன் எப்படி தொடர்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


கொள்வது, ஒருவீட்டை எப்படி அழகாகவைத்திருப்பது, அந்தத்தலைப்பின்கீழ் நகரில் உள்ள தனது பணக்கார குடும்பநண்பர்களுடன் நேரம் காலம் குறித்து எங்களை பிரத்தியேக வாகனத்தில் அழைத்துச்சென்று அழகானவீடுகளை, அலங்கார அமைப்புக்களை சுற்றிக்காட்டினா. வயதுமுதிர்ந்தவர்களை எப்படி ஆதரித்து மரியாதை யுடன் பழகுவது என்றெல்லாம் பல நல்லவிடயங்களை சொல்லித்தந்தா.

இப்படித்தான் ஒவ்வொருகிழமையும் வில்லியம்ரீச்சர் யூலியாவை சர்ச்சில் சந்திக்கின்றவா. ஒருகிழமை யூலியா சேர்ச்சுக்குப் போகவில்லை.திங் கட்கிழமை சாப்பாட்டு இடைவேளையின்போது விளையாட்டுமைதான படிக்கட்டுகளில் நாம் 5பேரும் அடுத்த தவணைப்பாடசாலை மாணவ தலைவனாக யாரைத்தெரிவு செய்யலாம் என்று அர்த்தமாக அலசிக்கொண்டிருந்தோம்.வந்திட்டாவே வில்லியம் ரீச்சர்.வந்ததுமல்லாமல் யூலியாவின் காதைப்பிடித்து திருகி "ஏன் நீர் நேற்று சேர்ச்சுக்கு வரவில்லை? தவறாமல் இனிமேல் வரவேண்டும் தெரியுமா ? நான் கவனித்தபடியே இருப்பேன்." என்றா. ஓம்ரீச்சர்" என்று பவ்யமாக கூறினாள் யூலியா. இதை நாம் பிழையாக எண்ணவேயில்லை.

எப்படியோ 5பேரும் ஒவ்வொரு வாழ்க்கைப்பாதையில் புகுந்து யெர்மன,சுவஸ, பிரான்ஸ் என்றுவந்து இறுதியில் டென்மார்க்கில் எல்லோரும் செட்டில் ஆகிவிட்டோம். அருகருகே ஒரே நகரில் இல்லாவிட்டிலும் அடிக்கடி சந்திக்கும்படி இருக்கிறோம். இதுதான் உலக அதிசயம்.வில்லியம்ரீச்சரின் மகளும் தலைநகரில் இருப்பதால் அவ மகளைப்பார்க்க வரப்போகிறா.வழக்கமாக எங்கள் 5 பேரைப்பற்றியும் ரீச்சருக்கு மிக நல்ல அபிப்பிராயம்.பாடசாலைகளின் உடற்பயிற்சிப்போட்டியோ சமயபாடபோதனைகளோ பேச்சு, சங்கீதப்போட்டிகளோ சரி மாணவி தலைவிகளாக நாம் இருந்து ஆற்றியபணி கள் பல. அவ எதுகூறினாலும் எமக்குப்பிடிக்காவிடிலும் நாம் தட்டாமல் சிரமேற்கொண்டு நடப்போம். அவ தனிய ஏதும் நிறைவேற்ற சிரமப்பட்டால் "பூர்ணிமா இங்கு வாரும்...இது இப்ப இப்படி இருக்கு ...எனக்கூறி என்மூலம் மற்றமாணவிகளின் ஒத்துழைப்பையும் பெற்றுவிடுவா. நானும் உண்மையாக அவவிற்கு உதவி செய்வேன். இப்போதுகூட என்னோடு வந்துநின்றுதான் தன்பழையமாணவிகளைப் பார்க்கப்போகிறேன் என எழுதியுள்ளா.அதனாலேதான்.....எனது இந்தக் குழப்பமெல்லாம்.

****

ஆனாலும் யூலியா படுமோசம் சேர்ச்சுக்கே போவதில்லை. ஒரு சமயத்தில் எனக்குக் கூறினாள் தனக்கு சமயத்தில் அக்கறையே இல்லையாம்.நான் அதிர்ந்து விட்டேன். எது அவளை இப்படிக்கூறவைத்தது.? நாளை அவளது பிள்ளைகள் தறிகெட்டுப்போய் நாலும் நாலுவிதமாக வந்துநிற்கத்தான் தலையைப்பிய்த்துக்கொண்டு அலறப்போகிறாள். தங்கள்பிள்ளைகள் சிறுவர்களாக இருக்கும்போது, அனுபவப்பட்டவர்கள் கூறும் புத்திமதிகள் சில பெற்றோர் காதில் ஏறவே ஏறாது. அந்தப்பிள்ளைகள் வளர்ந்து சொந்தப்பெற்றோருக்கே பிரச்சனையை கொடுக்கும்போதுதான் மற்றவர்கள் கூறிய புத்திமதிகள் நினைவுக்கு வரும். அப்போதுதான் அந்தப்பெற்றோர்கள் திருதிருவென



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


விழிப்பார்கள். வில்லியம்ரீச்சர் இவள்வீட்டில் ஒருநாள் தங்கி தனது இறைவழிபாட்டு நேரத்தில் " பரமண்டலத்தில் வீற்றிருக்கும் எங்கள் பிதாவே ! என ஜெபம் பண்ணத்தொடங்க இவள் என்ன செய்யப்போகிறாள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இவள்பிள்ளைகள்தான் என்னசெய்யப்போகுதுகள்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அல்லது வரவேண்டாம் என்றே கூறிவிடுவாளோ? நீண்டநாட்கள் அவளுடன் கதைக்கவில்லையே என்று ஒருதடவை ஒரு இனிய ஞாயிறு காலையில் தொலைபேசி எடுத்து தொடர்புகொண்டேன்.வழமைபோல "எப்படியப்பா சுகமாக இருக்கிறீர்களா ? என்ன செய்கிறீர்?" எனசம்பாசனையை ஆரம்பித்தேன் மிக குதூகலமாக. "வேற என்ன சமையல்தான்...." என்றாள் மொட்டையாக.ஒரு கனிவோ நளினமோ இன்றி. எனக்கு முகத்தில் அடித்ததுபோல இருந்தது.எனது அன்றைய குதூகலமே அப்படியே வடிந்துவிட்டது." ஏன்டா தொலைபேசியை எடுத்து வம்பை விலைக்கு வாங்கினேன்" என்று இருந்தது.இப்ப ரீச்சர் கதைத்தால் எப்படி தொலைபேசியில்கூட கதைப்பாளோ என்றும் யோசனையாக இருக்கின்றது.யூலியாவின் கணவர் யோசப் ஒருநேரம் பெண்கள் அடுப்பூதத்தான் வேணும், அவர்கள் அதற்கே பிறந்தவர்கள் என்பார் மறுநேரம் கூறுவார் "நான் பிள்ளைகள் பொறுப்பெல்லாம் அவவிடமே விட்டிட்டன் அவவாச்சு பிள்ளைகளாச்சு" என்பார்.மனுசன் நேரம் ஒரு கதை கதைப்பார் எனக்கு நம்பி ஏதும் கூற பயம்.அவர்கூறுபவைகளுக்கு பதில்கூறிவிடுவேன். ஆனால் நல்லவேளை, பிள்ளைகள் தமிழ் கதைப்பார்கள். அந்தளவில் எனக்கு சிறு திருப்தி. ரீச்சர் பிள்ளைகளோடு நன்கு பேசிமகிழலாம்.

ஆனால் அர்ச்சனா இருக்கிறாளே, சொல்லவே தேவையில்லை.பேரைக்கூட அனா என்று மாற்றிவிட்டாள்.அவளது சிவந்த நிறத்திற்கு கலர் அடித்த தலைமயிர் "இவள் இலங்கையினமே அல்ல" என்ற நினைவைத்தரும். பிள்ளைகளுக்கு தமிழே தெரியாது. தமிழ் தேவையும் இல்லையாம்.அர்ச்சனா என்ற என் பிரிய தோழி அனா கூறுகிறாள்.வீட்டிலும் டனிஸ், வெளியிலும் டனிஸ். ஆரம்பத்தில் என்முன்னால் பிள்ளைகளுடன் டனிசில் பதில்கூற அர்ச்சனா சிறிது தயங்கினாள். நான் அதை பொருட்படுத்தாத பாவனையில் இருந்தேன். இப்போ அவளுக்கு குளிர் விட்டு விட்டது.அவள் கணவர் ஜெகனும் அவளும் பயிற்றப்பட்ட நர்ஸ் ஆக ஒரே ஆஸ்ப்பத்திரியில் வேலைபார்க்கின்றனர். பிள்ளைகள்கூட தந்தையை தாயை "அம்மா அப்பா" என அழைப்பதில்லை. டனிசிலேயே அழைக்கின்றனர். அர்ச்சனா பழைய அர்ச்சனாவே இல்லை. ஆஸ்ப்பத்திரியே தனக்குக்கீழேஎன்பதுபோல கதைப்பாள்.டனிஸ் குடும்பங்களுடனேதான் ஒட்டு உறவுகள் எல்லாம். தமிழ்குடும்பங்களுடன் பெயருக்கு உறவேதவிர வேறு ஒட்டுறவு எதுவுமில்லை. நான் தொலைபேசி எடுத்தால்கூட ஜெகன்தான் கதைப்பார்.மனுசன் தனது தமிழ் உறவு ஆதங்கங்களை நெஞ்சில் இரகசியமாக பூட்டிவைத்திருக்கிறார். எம்மிடம் வரும்போது அந்தமாதிரி அரட்டை அடித்து தமிழ் உணவையும் ரசித்து உண்டு தன் ஆதங்கங்களை தீர்ப்பார்.வீட்டில் அனா வைத்ததுதான் சட்டம்.நிச்சயம் வில்லியம் ரீச்சர் என்னைக்கேட்பா "இப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அர்ச்சனாவை நடக்கவிட்டு பார்த்துக்கொண்டு இருக்கிறாயா" என்று.
ஓ....மை...GOD ! இது இந்த நாட்டு பணம் பண்ணியவேலை ரீச்சர் ....
நாகரீகமோகம் பண்ணியவேலை ரீச்சர்.....இந்த இளவெடுத்த கலாச்சாரம் எல்லோரையுமே பாதித்திருக்கு ரீச்சர். அந்தவகையில் அவர்களின் சொந்தவிடையத்தில்நான் தலையிடமுடியாதே ரீச்சர்" என சொல்லவருகுது. ஆனால் அது ரீச்சருக்கு புரியுமா? நாம் நமது நாட்டில் உறவினர்களை நண்பர்களை அயலவர்களைச் சார்ந்து வாழ்ந்தோம். சகல உதவிகளுக்குமாக இங்கு அனைத்தையும் பணத்தையும் அத்துடன் தொலைபேசி வசதியையும் வைத்து பாசையை படிப்பித்து தனியஇயங்கும் மனஉறுதியையும் பெறவைத்துவிட்டனர். அப்புறம் நான் பெரிது நீ பெரிது என்று அல்ல எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்பதுதானே பொதுவேதமாக இருக்கின்றது. இது ரீச்சருக்கு புரியுமா?
நர்மதா.....அவள் இன்னொரு ரகம். அவள் வயதில் சிறியவளும்கூட.ஆனால் வயதுக்கு மூத்தவர்கள் என்று மதிப்போ மரியாதையோ ஏதும் அவள் கொடுப்பதில்லை. இத்தனைக்கும் ஔவையாரின் ஆத்திசூடி,கொன்றைவேந்தன் எல்லாம் அவளுக்கு கரைபாடம்.ஏற்கனவே நாம் இரண்டு கலாச்சாரமோதலில் திணறிக்கொண்டிருக்கின்றோம், தமிழ்–டனிஸ் என்று.அவள் இந்தியாவில் தனது ஆபீசில் ஒன்றாகவேலைபார்த்த மோகன் என்ற கேரளத்துக்காரரை திருமணம் செய்தவள்.அவளுக்கு என்னடா என்றால் மூன்றுவிதமான கலாச்சாரமோதல்கள். ஒருசமயம் குடும்பமே, மிகஆடம்பரமாக வெளிக்கிட்டு வெளியே வருவினம் கொண்டாட்டங்களுக்கு.ஒருசமயம் பார்க்க பரிதாபமாக ஏனோதானோ என வருவினம். சிலசமயம் பிரச்சனைகள் வீட்டில வரும்போது எனதுகணவருக்கு தொலைபேசியில் கூறி வீட்டுக்கு அழைத்து அவரிடம் ஆலோசனைகள் பெறுவாள். மறுசமயம் யாவும் மறந்து அதாவது நன்றியை மறந்து நிற்பாள். இவர் கூறுவார்"விட்டுத்தள்ளப்பா வாழ்வில் முட்டிமோதி தானே நல்லது கெட்டது விளங்கமுடியும்" என்று.பிறகு குறுவார் "நீ கூட அவள்மாதிரி அசடுபோல இல்லாமல் அடிக்கடி அவர்கள் சுகங்களை விசாரித்துக்கொள் அவளது பிரச்சனைகளே வேறுமாதிரி" என்பார். உண்மைதான் தன் இனம் அல்லாதவரை திருமணம்செய்வதால் ஆரம்பத்தில் குழப்பங்கள் தெரிவதில்லை. காலங்கள் செல்லச்செல்லவே பிரச்சனைகள் பூதாகாரமாக உருவெடுக்கும்.
வில்லியம்ரீச்சருக்கு கங்காவையும் என்னையும் பொறுத்தவரை பிரச்சனையே இல்லை. தொலைபேசியில்கூட இனிமையை வழங்கப்போவது கங்காவின் பிள்ளைகள்தான்.அவர்கள் பேச ஆரம்பிக்கும்போதே அழகாக தமிழில் வணக்கம் என்று இனிமையாக தொடங்குவார்கள். கங்கா அருமையாக தமிழ்மணம் கமழ பிள்ளைகளை வளர்க்கிறாள். பாலைவனத்தில் ஒரு சோலைபோல கங்காகூட தனக்கு ஆயிரம்பிரச்சனைகள் இருந்தாலும் "கலோ" என லயத்தோடு இனிமையாக இழுத்து அன்பொழுக பேசுவாள்.இன்னும் இன்னும் பேசும் ஆவலைத்தூண்டுவாள். யூலியாபோல பேசி எனது இனியநாளையே பாழடிக்கமாட்டாள்.

சஞ்சீவி 30

www.tamilarangam.net


நம் எல்லோருக்குமே முன்பு ஒவ்வொரு கனவுகள்.எனக்கு ஒரு பாடசாலை ஆசிரியையாக வந்து என் சொந்தத்திறமையால் முன்னேறி ஒரு பாடசாலையையே நிர்வகிக்கும் அதிபராக வரவேண்டும் என்ற கனவு.என்னசெய்வது? நாட்டுநிலைமை, இன்று டென்மார்க்கில் வாழ்வு.ஏதோ ஓரளவுபடித்து அரசாங்க உதவியுடன் பூந்தோட்ட நிர்வாகம் செய்கிறோம். நானும் எனது கணவரும் திட்டமிட்டு இதைப்படித்து இன்று மிகப்பெரிய 2 கண்ணாடி அறைகளுடன் பல இடங்களுக்கும் அந்தந்த சீசனுக்குரிய பூஞ்செடிகளை விநியோகம் செய்கிறோம். 3வது கண்ணாடி அறைக்குரிய திட்டங்களை முடித்திட்டோம்.விரைவில் செயற்படுவோம்.பிள்ளைகளும் எங்களுடனேயே வேலை, பலவிதங்களில். மொத்தம் 10பேர் கொண்ட ஒரு சிறு "ராஜாங்கம்" இது.எம்மைப்பொறுத்தவரை இரட்டைவாழ்வுதான். வீட்டில் தமிழ்..தமிழ்.... தமிழ்தான். நான்நினைக்கிறேன் ....வில்லியம்ரீச்சர் வந்ததும் முதலில் சிவனேசன் சித்தப்பா குடும்பத்தைகூப்பிட்டு ஒரு விருந்து வைப்போம். இதில் நமது மக்கள் எப்படி மாறியுள்ளனர் – வாழ்வு எப்படி மாறியுள்ளது – எமது குழப்பங்கள் என்ன என முதலில் ரீச்சருக்கு ஒரு அறிமுகம்.அதில் ரீச்சர் குழம்பியிருக்கும்போது ஒவ்வொருஇடமாக அவவை அழைத்துக்காட்டுவோம். இறுதியாக கங்காவீட்டிற்கு. அப்போ கங்காவீட்டில் முழுதிருப்தியும் ஆறுதலும் பெறுவா. இதுதான் ரீச்சர் எமது வாழ்வு,குழப்பம் எல்லாமே என்று காட்டுவோம்.
நான் வேறு என்னதான்....செய்வது...?

பூர்ணிமா!....பூர்ணிமா! எழும்பப்பா...8.00 மணி. இன்று பூக்கன்றுகள் அனுப்பவேண்டுமல்லவா? என்கிறார் என் கணவர்.........ம்............எப்படி வில்லியம்ரீச்சரை சமாளிப்பது...என்று தீர்வுகண்டு.........தூக்கம் வர......சரியான"லேட்"டாப் போச்சுதப்பா...ம்.....என்று முனகியபடி எழும்புகிறேன்.

முற்றும்

( 40ம் பக்க தொடர்ச்சி )

விருப்பமில்லாவிடில் அத்தகைய ஒலி உண்டாக்கக்கூடிய புதியஎழுத்துக்களை தமிழில் உருவாக்கவேண்டும். சிங்கள மொழிஎழுத்துவளத்தில் தமிழ்மொழியை விட வளர்ந்திருப்பதற்கு காரணம் அவர்கள் புது எழுத்துக்களை உருவாக்கி வருவதுதான். சமஸ்கிருத எழுத்துக்களை கடன் வாங்கிவிட்டோம் என்று வெட்கப்படுவது முட்டாள் தனமாகும். டெனிஷ்மொழியில் பல ஐரோப்பிய மொழிகள் கலந்திருப்பதை கூற அவர்கள் வெட்கப்படுவதில்லை. அதனால் அவர்கள் எதிலும் குறைந்து போகவுமில்லை. Hus(ஹூஸ்) என்ற சொல்லை குஸ் என்று உச்சரித்தால் நாம்தான் வெட்கப்படவேண்டி வரும். ஒன்றில் உருவாக்கவேண்டும். அல்லது கடன்வாங்க வேண்டும். இன்னொரு மொழியோடு கலக்காத மொழிகளே இந்த உலகில் இப்பொழுது இல்லை. சில பிறமொழிச்சொற்களை தமிழ்எழுத்துக்களால் எழுதமுடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சஞ்சீவி 30

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# மனவருத்தங்கள்

க. ஆதவன்

டிசம்பர் 18, 1994 அன்று திருச்சியில் நடைபெற்ற 'புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாடு' பற்றிய சிறப்பு மலர், தபாலில் வந்திருந்தது.

நான் அதைப்படித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் ரெடி, இனிப் போகலாம் என்று அவர்கள் சொன்னார்கள். புத்தகத்தைப் பாதியில் வைத்துவிட்டு, காரை ஸ்ராற் செய்தேன். பாதிவழியில் வேறு சிலரும் வந்து காரில் ஏறிக்கொண்டார்கள்.

எல்லோருமாக அங்கே போனோம். என்னுடன் வந்தவர்கள், காரை விட்டிறங்கியதும் அந்த மண்டபத்தில் குழுமியிருந்த கூட்டத்துடன் கரைந்து போனார்கள்.

ஒரு மூலையில் ஒரு கதிரை freeஆக இருந்தது. அதில் நான் அமர்ந்து கொண்டேன். அதிலிருந்தபடி அங்கு நடக்கும் எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் கொண்டிருந்தேன்.

A: இண்டைக்கு ரோட்டு சரியான வழுக்கல்.
B: என்ரை mazda 93ம் ஆண்டு மொடல். அது வழுகேல்லை.
C: நாட்டிலை யுத்தநிறுத்தம் வந்திட்டுதாம்.
D: இவள் இப்ப நல்லாக் கொழுத்துப் போனாள்.
E: 'காதலன்'படத்திலை வடிவேலுவின்ரை ஆட்டம் பாத்தனியளே சுப்பர்!
F: உங்கடை 'கொமூன்' அவளவு சரியில்லை. எங்கடை இடத்திலை போய்க்கேட்ட உடனை தந்திடுவாங்கள்.
G: உது வாங்கிறதுக்கு ஏன் Bilkaவுக்குப் போகவேணும் Aldiயிலை மலிவுதானே.
H: அவளின்ரை சாமத்தியச்சடங்கிற்கு இவள் கட்டின 'சாறியிலும்'பாக்க இது விலைகூட. சிங்கப்பூரிலை இருந்தல்லே கொண்டுவந்தனாங்கள்.
I: அந்தாளின்ரை சீட்டுக்கழிவு குறையத்தானே, அப்ப ஏன் அதிலை சேர்ந்தனியள்.
J: 'ஐசிங்கேக்' செய்யிறதுக்கு அந்தாளைக் கேட்டுத்தான்.
K: எட்டு வீத வட்டிக்கு எடுத்தனான். இப்ப ரெண்டு மாசமாகுது.

சஞ்சீவி 30

www.tamilarangam.net



பாங்கில கதைச்சுப்பாரன் தந்தாலும் தருவங்கள்.

L: தமிழைப் படிப்பிச்சு என்ன செய்யப்போறியள்?

M: அவனிட்டையே மரக்கறி வாங்கிறனியள்? அவன்ரை முருங்கைக்காய் சரியான அழுகல்.

N: உப்பிடி 'ரை' கட்டிக் கொண்டிருந்தால் வீடியோவுக்கு வடிவில்லை. தற்செயலாக நாட்டுக்கு வீடியோ போனாலும் அலங்கோலமாயெல்லே இருக்கும். மாத்திக் கட்டுங்கோ.

O: இன்னாருக்கு, பிறகும் பொம்பிளைப்பிள்ளைதானாம் பிறந்தது. இன்னும் ஒருக்கா 'ட்ரை' பண்ணிப்போட்டு, பிறகுதானாம் 'ஒப்பிரேஷன்' செய்யப்போகினமாம்.

P: அந்தாளின்ரை ஓட்டமும் மொக்கு ஓட்டந்தானே, கார் அடிபடாமல் என்ன செய்யும்? இனி நெரிச்சுப்போட்டு 'பொசிக்கிறிங்கிலை' காசெடுத்தால் லாபம் எண்டு சொல்லுங்கோ.

Q: அவள் ஓடிவிட்டாளோ? ஓடுங்கள் தானே. பிள்ளையளை வளர்கிறது மாதிரி வளர்த்தா அதுகள் ஏன் ஓடுதுகள்.

R: கலியாணங்கட்டாமல்- சேர்ந்து வாழுறது நல்லது தானே. காசெல்லே கூடத் தருவாங்கள்.

S: 'சிற்றிசன்சிப்' எடுக்கிறது எண்டா சும்மா லேசுப்பட்ட வேலையில்லை. நான் ஒரு 10க்குக்கிட்டச் சிலவழிச்சிருப்பன்.

T: பாங் ரு பாங் அனுப்பினபடியாத்தான் கிடைக்கேல்லை. உண்டியலுக்குள்ளை போட்டிருந்தா உடனை கிடைச்சிருக்கும்.

U: உந்தாள் இப்ப நல்லா மெலிஞ்சு போச்சுது. தாச்சிக்கு நிண்டவன் எங்கையோ மாறிவிட்டானாம்.

V: காசு சேர்க்கிற ஆக்கள் உங்களிட்டையும் வந்தவையே- நான் 500 எழுதிப்போட்டு 100 தான் குடுத்தனான்.

W: நாளைக்கு தியேட்டரிலை படமாம்.

X: நாங்கள் 'கட்' பண்ணிற்றம். ஒவ்வொரு நாளும் எடுத்து ஸ்ஸ்ஸ் எண்டு சொல்லுறாங்கள். ரெலிபோன் இல்லாட்டிக் காசும் மிச்சந்தானே!

Y: இந்தியா விசா எடுக்கிறதுக்கு ஒரு நல்ல ஆள் புடிச்சிருக்கிறன்.

Z: நூடில்ஸ் ஐ விட இடியப்பமும் ஆட்டிறைச்சியும் தான் இந்தமாதிரி festகளுக்கு நல்லாயிருக்கும்.

சம்பாஷணைகள் கேட்டுக்கொண்டிருந்தன. இடையில் சிலர் எழுந்து வெளியேபோய் காருக்குள் இருந்து ஏதோ செய்துவிட்டு ஒரு 'சூயிங்கத் தை'ச் சப்பிக்கொண்டு ஒன்றுந்தெரியாததுபோல் மனைவியர்க்குப் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டனர்.

பிள்ளைகள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தன. சில பிள்ளைகள் 'ஊர்வசி... ஊர்வசி...' என்றும் 'முக்காபலே.... முக்காபலே....' ரகுமானின் பாடலைக் கத்திக்கொண்டு திரிந்தார்கள்.

சஞ்சீவி 30

www.tamilarangam.net



சில பெண்களின் கழுத்தைக் காணமுடியவில்லை. கழுத்துப்பூரா நகைகள் தொங்கிக் கொண்டிருந்தது.

எல்லோருக்கும் சாப்பாடு வந்தது. சாப்பிட்டு முடிந்ததும், வீடியோவில் எல்லோரும் முகத்தைக் காட்டினார்கள். சிலர் வெட்கப்படுவதுபோல் பாவனை செய்தார்கள். சிலர் முந்தானையைச் சரிசெய்வதுபோல் சங்கிலியைச் சரி செய்தார்கள். சிலர் பாத்ருமுக்குப் போய் தலையைச் சீவிக்கொண்டு வந்தார்கள்.

முன்னாலிருந்த தட்டத்தில் தாங்கள் கொண்டுசென்ற 'என்பலப்புகளை' வைத்தார்கள்.

"நாங்கள் ரெடி இனி போகலாம்" என்று அவர்கள் சொன்னார்கள். நான் காரை ஸ்ராற் செய்தேன். அவரவர் வீடுகளில் இறங்கிக் கொண்டார்கள்.

'புலம் பெயர்ந்த தமிழர்நல மாநாடு சிறப்பு மலரை' விட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்தேன்.

●

---

## ஏன் என்னை மட்டும்!

நான்
பிறந்தபோதும் கறுப்பாகவே
வளர்ந்தபோதும் கறுப்பாகவே
சுகவீனமடைந்தபோதும் கறுப்பாகவே
சூரியவெப்பத்திலும் கறுப்பாகவே
ஆனால்
நீ
பிறந்தபோது இளஞ்சிவப்பு
வளரும்போது வெள்ளை
சுகவீனமடையும்போது பச்சை
சூரியவெப்பத்தில் சிவப்பு
கடுங்குளிரில் நீலம்
நீ
ஏன் என்னை மட்டும்
நிறம் சொல்லியழைக்கிறாய்?

(இலங்கையில் பிறந்து ஆங்கிலிஷ் குடும்பத்தால் தத்தெடுக்கப்பட்ட ஒரு 15 வயதுப் பெண் பிள்ளையின் பாடப்புத்தக அட்டையில் கண்டது... ரவி)

சஞ்சீவி 30

www.tamilarangam.net



# ''சுவிஸை விட்டுப் போகமுடியாது'' என்றேன் தாக்கினர்; பின்னர் சிறையிலடைத்தனர்''

## நாடு கடத்தப்பட்ட வடபகுதி வாலிபர் கூறுகிறார்

சுவிஸிலிருந்து தமிழ் வாலிபர் ஒருவர் சுடந்த 30ஆம் திகதி இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

அந்நாட்டைச் சேர்ந்த பொலீஸார் இருவர் விமானத்தில் இவ்வாலிபரை அழைத்து வந்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து இங்குள்ள தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். அதன் பின்னர் இவ்வாலிபர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பராமரிப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏழாலை, குப்பிளான் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் முரளிதரன் என்ற வாலிபரே திருப்பி அனுப்பப்பட்டவராவார். இவரைத் தவிர ஏற்கனவே 6 பேர் சுவிஸிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டு கொழும்பில் செஞ்சிலுவைச் சங்கத்தின் பராமரிப்பில் உள்ளனர்.

இவ்வாலிபர் 'கேசரி' காரியாலயத்திற்கு வந்து சுவிற்ஸர்லாந்து நாட்டில் தனக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் குறித்து விபரித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

''1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான் சுவிஸ் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். 15 மாதங்கள் நான் அங்கு தொழில் செய்ததும் 1994இல் எனக்கு கடிதமொன்று வந்தது. என்னை நாட்டைவிட்டு ஒரு மாதத்தினுள் வெளியேறுமாறு அக்கடிதத்தில் கேட்கப்பட்டிருந்தது.

சுவிஸில் இருந்து திருப்பி அனுப்பப்படுவதற்காக தமிழ் வாலிபர்கள் பலர் கைதானதாகவும் நான் அறிந்தேன். இதனால் ஒருசில மாதங்களில் சூரிச் நகரிலுள்ள அகதிமுகாமுக்கு நான் போய்ச் சேர்ந்தேன். அங்கு வேலை செய்தால் சம்பளம் தருவார்கள். ஐந்து மாதங்கள் அகதிமுகாமில் நான் இருந்தேன்.

இவ்வேளையில் 28.12.1994 அன்று வாசல் என்ற நகருக்கு நண்பன் ஒருவனை சந்திப்பதற்காக நான் சென்றபோது வீதியில் நின்றிருந்த பொலீஸார் என்னைக் கண்டதும் கைது செய்தனர். எனது கைகளுக்கு விலங்கும் பூட்டப்பட்டது.

அந்நகரின் பொலீஸ் நிலையத்தில் கைவிலங்குடனேயே ஒருநாள் என்னை அடைத்து வைத்த பொலீஸார் மறுநாள் என்னை சூரிச் நகருக்கு அனுப்பிவைத்தனர். இங்கு ஒருமாத காலம் நான் சிறையில் இருந்தேன்.

ஜனவரி 26ஆம் திகதி என்னுடன் கதைத்த அதிகாரிகள் சிலர் மறுநாள் நான் இலங்கைக்கு அனுப்பப்படவிருப்பதை தெரிவித்தனர்.

இதற்கு நான் மறுப்பு கூறினேன். நாட்டுக்குத் திரும்ப நான் தயாரில்லை என்றதும் 8 பேர் சேர்ந்து என்னை தாக்கத் தொடங்கினர். சிறைக்குள் வைத்து எனது ஆடைகள் அனைத்தையும் களைந்த பின்னர் கைகளாலும் கால்களாலும் என்னைத் தாக்கினர். கைகளில் விலங்கிடப்பட்ட நிலையிலேயே நான் தாக்கப்பட்டேன். (இவ்வேளை கைகளிலும் முகத்திலும் இருந்த காயங்களின் தழும்புகளை காண்பித்தார்)

கடும் தாக்குதலுக்கு உள்ளான நான் சிறிது நேரத்தில் மயங்கிப் போனேன்.

27ஆம் திகதி என்னை வாகனம் ஒன்றில் சூரிச் விமான நிலையத்திற்கு பொலீஸார் அழைத்துச் சென்றனர். அப்போது கூட எனது உடலில் உடைகள் எதுவும் இருக்கவில்லை. அடி உதைகளினால் உடல் எங்கும் வீங்கியிருந்தது. அடிவயிறு வலித்தபடியே இருந்தது.

விமான நிலையத்தை அடைந்ததும் அறையொன்றுக்குள் நான் கூட்டிச் செல்லப்பட்டேன்.

என்னை தாயகத்திற்கு திருப்பி அனுப்பப் போவதாக அவர்கள் கூறினர். என்னால் முடியாதென கூறியதும் மீண்டும் அடித்தனர். இப்போது எனது உடலில் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் கசிந்தது.

முதலில் நான் மருத்துவரிடம் செல்ல வேண்டுமென கேட்டதும் அவர்கள் அறையை பூட்டி விட்டுச் சென்றனர். சில மணித்தியாலங்கள் சென்றதும் டாக்டர் ஒருவருடன் பொலீஸார் வந்தனர். டாக்டர் என்து காயங்களுக்கு மருந்து போட்டார். பொலீஸார் அங்கு வைத்து பாஸ்போர்ட் ஒன்றையும் என்னிடம் தந்தார்கள். அடையாள அட்டையும் தந்தார்கள்.

என்னை அமைதியாக நாட்டுக்குத் திரும்பி விடும்படி வற்புறுத்தியும் நான் சம்மதிக்காததால் மீண்டும் சிறைச்சாலைக்கே அழைத்துச் சென்றனர். அங்கு என்னை உடை எதுவும் அணிவதற்கு அவர்கள் அனுமதிக்கவில்லை. இருநாள்கள் உணவும் தரவில்லை. தண்ணீர் மட்டும் குடிக்க முடிந்தது. இரு தினங்கள் உடலில் உடையெதுவும் இன்றி குளிரில் நான் பட்ட அவஸ்தை விபரிக்க முடியாதது.

இப்படியிருக்க இரு தினங்கள் கழித்து 29ஆம் திகதி திடீரென பொலீஸார் என்னை வாகனம் ஒன்றில் அழைத்துச் சென்று விமானத்தில் ஏற்றினர்.

எனது கைகளை வாகனத்தில் வரும்போதே உடலுடன் சேர்த்து இரும்புச் சங்கிலியினால் பிணைத்தனர். வாய்க்கு 'பிளாஸ்டர்' ஒட்டப்பட்டது. இவற்றையெல்லாம் மறைப்பதற்காக குளிருக்குப் பயன்படுத்தும் 'ஜக்கற்' ஒன்றை அணியச் செய்தனர்.

விமான இருக்கையின் இருபுறமும் இரு பொலீஸார் என்னுடன் வந்தனர். விமானம் புறப்பட்டு இரு மணி நேரத்தில் மற்றொரு விமான நிலையத்தில் தரையிறங்கியது. 4 மணி நேரத்தின் பின்னர் விமானம் மீண்டும் புறப்பட்டதும் எனது வாயிலிருந்த பிளாஸ்டர் அகற்றப்பட்டது.

நான் மிகவும் களைப்படைந்திருந்தேன். உணவு தரும்படி கேட்டதும் தண்ணீர் மட்டும் தந்தனர். கழிவறைக்கு செல்ல வேண்டுமென கேட்டதும் இருவரும் கூடவே வந்தனர்.

10 மணித்தியாலத்தின் பின்னர் கட்டுநாயக்கவை நெருங்கும் சமயத்தில் எனது கைச்சங்கிலி அகற்றப்பட்டது. உணவும் தந்தார்கள்.

விமான நிலையத்திலிருந்த பொலீஸாருடன் சுமார் ஒருமணி நேரம் பேசிய பின்னர் தூதரகத்தைச் சேர்ந்தோரிடம் நான் ஒப்படைக்கப்பட்டேன். பின்னர் பராமரிப்பு முகாமுக்கு வந்ததும் எனது காயங்களுக்கு மருந்து போடப்பட்டது. உணவும் தந்து பராமரித்தனர். இவ்வாறு அவ்வாலிபர் கூறினார்.

(Virakesari Friday 03rd February - 1995)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net







# நரியும் முயலும்



ஒரு பெரிய காட்டில் பல நிறங்களை தனது மேனியில் கொண்ட ஒரு அபூர்வமான நரி ஒன்று வாழ்ந்து வந்தது. பல நிறங்களை தனது மேனியில் கொண்ட காரணத்தால் தான் கடவுளால் அனுப்பப்பட்ட அரசன் என்று ஏனைய மிருகங்களை ஏமாற்றி ஆட்சி செய்து வந்தது. இதைக் கேட்ட மிருகங்களும் அதை நம்பி நரிக்கு பயந்து வாழ்ந்து வந்தன. தனக்கு மிருகங்கள் பயப்படுவதை கண்ட நரி அவற்றை அடிக்கடி துன்புறுத்தி வந்தது.

இதேவேளை அந்த காட்டின் எல்லைப்பகுதியில் ஒரு புத்திசாலியான முயல் வாழ்ந்து வந்தது. முயல் நரியை பற்றி கேள்விப்பட்டிருந்தது. ஒரு நாள் காட்டில் உள்ள வயலில் உணவு தேடிக்கொண்டிருந்த முயலை, நரி கண்டுவிட்டது. நரி வழமைபோல மிகுந்த கோபத்துடன் ' நீ யார் ?, யாரை கேட்டு இங்கே வந்தாய்?' என்று முயலை மிரட்டத் தொடங்கியது. முயல் நரியை கண்டு பயந்தாலும் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் ' இது எனக்கு மனைவியாக வரப்போகும் ஒரு தேவதையின் இடம், இங்கே வர நான் யாரினதும் அனுமதியையும் பெறத்தேவையில்லை, இப்பொழுது கூட தேவதை அங்கே என்னை அழைத்திருக்கிறாள், அதனால் அங்கே செல்ல ஒரு அழகான குதிரையாக தேடிக்கொண்டிருக்கிறேன். நீயும் அழகாக இருக்கிறாய், என்னை தேவதையிடம் கொண்டு போய் சேர்த்தால் உனக்கு தேவதையிடம் இருந்து பல பரிசில் கிடைக்கும் ' என்றது.

இதைக்கேட்ட நரி உள்ளுக்குள் கோபமடைந்தாலும் பரிசில்களுக்காக ஆசைப்பட்டு முயலைத் தேவதையிடம் கொண்டு செல்லச் சம்மதித்தது. நரியின் முதுகில் ஏறியமர்ந்த முயல் மிகவும் கரடுமுரடான பாதைகள் வழியே அழைத்துச்சென்றது. இதை கண்ட மற்றய மிருகங்கள் ஆச்சரியமடைந்தன.

காட்டை விட்டு முயல் வசிக்கும் இடத்துக்கு அருகேயுள்ள ஒரு குளத்துக்கருகில் இரண்டும் வந்து சேர்ந்தன. முதுகிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இறங்கிக்கொண்ட முயல் நரியிடம் 'இந்த குளத்தில் தான் தேவதை இருக்கிறாள், நீ அவளை பார்க்க முடியாது, அவளும் உன்னை பார்க்க விரும்பமாட்டாள், அதனால் திரும்பிப்பார்க்காமல் உனது வாலை தண்ணிருக்குள் வைத்துக்கொண்டிருந்தால் உனக்குரிய பரிசில்களை வாலில் கட்டிவிடுவாள், நீ எடுத்துக்கொண்டு செல்லலாம்' என்று கூறிவிட்டு புதர்களில் மறைந்து கொண்டது.

முயல் தன்னை ஏமாற்றுவதை உணராத பேராசையுடைய நரி வாலை தண்ணிருக்குள் வைத்துக் கொண்டு காத்திருந்தது. நாட்கள் செல்ல செல்ல குளிர்காலம் தொடங்கியது. தண்ணிர் பனிகட்டியாக நரியின் வாலும் பனிகட்டியால் சூழத்தொடங்கியது. இதனால் நரியின் வாலில் பாரம் கூடிக்கொண்டு செல்ல நரியும் தனக்கு நிறைய பரிசில்கள் தேவதை வைப்பதாக நினைத்து மகிழ்ந்தது. நரி பரிசில்கள் போதுமென்று நினைத்து எழுந்து நடக்க முயற்சித்தது. ஆனால் முடியவில்லை. நரியின் வால் பனிக்கட்டியில் நன்றாக இறுகிவிட்டது. 'என்னால் பரிசில்கள் சுமக்க முடியவில்லை, கொஞ்சத்தை குறைத்துக்கொள்' என்று கத்தியது. ஆனால் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. அங்கே தேவதையென்று ஒன்று இருந்தால்தானே. பசிக்களைப்பினால் தன்னை மறந்து ஊளையிடத் தொடங்கியது. ஊளைச்சத்தத்தை கேட்ட நாய்கள் அங்கு வந்து நரியைக் கடித்துக்கொன்றன. எல்லா மிருகங்களையும் ஏமாற்றிவந்த நரி தானே முயலிடம் ஏமாந்து இறந்துபோக மிருகங்கள் சந்தோசமாக வாழ்ந்தன.

— டெனிஷ் கதை — தமிழில் ரவி

---

## உன்னை மறுப்பது....

*—இன்குலாப்*

துருவம் வரைக்கும்
உனது சிறகுகள்!
சொந்த மண்ணிலோ
சிதையும் கூடுகள்...
உறவுக் கிளைகளில்
நகங்கள் முளைத்ததால்
வானப்பரப்பிலோ
திசைகள் தொலைந்தன.
மூடப்பட்ட கதவுகளுக்கு வெளியே
வாடிக்கிடக்கும்
அனிச்ச மலர்கள்!
மறுக்கும் கரைகளில்
அலைகளில் மிதக்கும்
அடைக்கலம் தேடும்

என்
குருதிக் கொடிகள்.
முடக்கப்பட்ட
உன்
முகாம்களில் கேட்டேன்.
துரத்தப்பட்ட
உன்
சுவடுகளில் உணர்ந்தேன்.
எனக்கும் வேர்விட
இடமில்லை என்பதை
என்சொல் பழகிய
செவிகள் கேட்கட்டும்
'உன்னை மறுப்பது
என்னை மறுப்பது'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு தோணியில் கால் வைக்கலாமா?!!:
## புகலிடத்தில் புலம்பெயர்ந்தோர் இணைவு செயல்முறை.

V.S.K. நாதன்

புலம் பெயர்ந்த மக்களாகிய எம்மவரின் நிஜமான நாளாந்த வாழ்க்கையை பற்றி எண்ணும்போது, மேலேயுள்ள முதுமொழியை எவராலும் எண்ணாமல் இருக்கவோ, அல்லது அதன் கருத்து ஆழத்தை புரிந்துகொள்ளாது இருக்கவோ/ அசிரத்தையாக இருக்கவோ முடியாது. இம் முதுமொழி எமது அகதிநிலையில் நாம் என்ன முறையில் வாழ்க்கையை தொடரவேண்டும்/ வருங்கால சந்ததிகளை நெறிப்படுத்த வேண்டும் என்பதை மிகத்தெட்டத் தெளிவாக சொல்செட்டுடனும் கருத்துச்செறிவுடனும் வெளிப்படுத்துகிறது என்றால் மிகையாகாது. அத்துடன் எமது முன்னோரும் எமது இன்றைய சந்ததியினர் எதிர்நோக்கும்நிலையை எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் ஏதோ ஒரு வாழ்க்கைத் துறையில் அனுபவித்துத்தான் இம்முதுமொழியை தமது அனுபவங்களுடாக உருவாக்கி தமது எதிர்கால சந்ததிக்கும் தேவைப் படுமென விட்டுச்சென்றார்களா எனவும் எண்ண வைக்கிறது.

முதலில் இம்முதுமொழியின் கருத்துச்செறிவை சிறிது நுணுகிப்பார்த்து பின்னர் எமது தற்போதைய நிலையை அது எவ்வாறு பிரதிபலிக்கின்றது என்பதை பார்ப்போம். "இரு தோணி" என்ற சொற்தொடர் மேலோட்டமாக இரண்டு தோணிகளை/ பொருட்களைக் குறிப்பிட்டாலும் அதன் ஆழமான கருத்துநிலையில் இருதனியான கருத்துக்களையோ, நிலைப்பாடுகளையோ, வாழ்க்கைமுறைகளையோ குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

இதேபோல் "கால்வைக்கலாமா?" என்ற சொற்தொடர் ஒருவரை வினாவுவது, எச்சரிப்பது போன்ற உணர்வுத்தளத்தூண்டலையும், ஒருவரின் வியப்பு/விழிப்பு நிலையைத் தூண்டி அவதான/ஆர்வ சிந்தனைத்தளத்தில் புகுவதாகவும் இருக்கிறது. இவ்விரு உணர்வு, சிந்தனைநிலைகளும் இடைவிடாது தூண்டப் பட்ட நிலையிலே புலம்பெயர்ந்த மக்களாகிய நம்மவரில் அநேகர் புகலிடத்தில் வாழ்கின்றோம்.

இம்முதுமொழி வேறுபல அர்த்தங்களைக் கொண்டிருந்தாலும் இக் கட்டுரையில் மேலே விபரிக்கப்பட்ட அர்த்தத்திலேயே பொருள் கொள்ளப் படுகின்றது. அதாவது புலம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த நாட்டில் வாழ்ந்த கிட்டத்தட்ட முழுமையான வாழ்க்கை அனுபவத்துடன் வந்தேறிய நாட்டின் புதிய வாழ்க்கைமுறைகளைச் சந்திப்பதும் இதானால் அவர்கள் உணர்வு சிந்தனைத்தளங்கள் இடைவிடாது தூண்டப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதையும் குறிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இரு தோணி வாழ்க்கை பற்றி:

புலம் பெயர்ந்த மக்களில் குறிப்பாக வயதுவந்தோர், பெற்றோர்கள் தமது நாடுகளிலேயே குடும்ப- சமூக வாழ்க்கையில் சித்திபெற்றவர்கள் ஆவர். ஊரில் அவர்கள் "பூரணமான/ முழுமையான" என்று சொல்லுமளவிற்கு தமது குடும்ப வாழ்க்கையினை நடாத்தியவர்கள் ஆவர். இம் மக்கள் புகலிடநாடு ஒன்றுக்கு வந்து சேர்ந்தவுடன் முற்றும் எதிர்பாராத "குழந்தைத்தளம்" என்று விபரிக்கக் கூடியநிலைக்கு வந்துவிடுகிறார்கள். தமது சொந்தநாட்டு வாழ்முறையில், (அதாவது தமது ஊரில்) "வயதுவந்தவர்கள்"தளத்தில் இருப்பவர்கள் புதிய புகலிடநாட்டு வாழ்முறைக்கு "தக அமைவு" செய்துகொள்ள குழந்தை நிலையில் இருந்து ஆரம்பிக்க வேண்டியுள்ளது. இந்தப்பண்பை மொழி, கல்வி, வேலைவாய்ப்புத்துறைகளில் மிகத்தெளிவாக அவதானிக்கலாம். பெற்றோரும் அவர்களின் வயதுவந்த பிள்ளைகளும் சில வேளைகளில் சேர்ந்தே பாடசாலைப் பையுடன் மொழி, மற்றும் பாடசாலைகளுக்கு செல்வதை அவதானிக்கலாம்.

இரு தோணிகளில் ஒன்று என்று விபரிக்ககூடிய அளவிற்கு அகதிகளின் சொந்த வாழ்முறை அனுபவங்களும்,வேறு தனியான தோணியென குறிப்பிடும் அளவிற்கு புகலிட நாடுகளின் (உதாரணம்: ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா) வாழ்க்கைமுறைகள் இருக்கின்றது. இருவேறு வாழ்க்கை முறைகள் என்பதை பல தளங்களில் அவதானிக்ககூடியதாக இருக்கின்றது. குறிப்பாக தனியாள், குழுநிலை, குடும்ப சமூக கலாச்சார, சூழல் தளங்களில் செறிந்திருப்பதைப் பார்க்கலாம்.

## தனியாள் தளம்:

பூமி மேற்பரபில் பல நூற்றுக்கணக்கான சமூகங்கள் வாழ்ந்து வந்தாலும் அவற்றை பெருமளவில் மேற்குநாட்டு/கிழக்குநாட்டு சமூகங்களென பகுத்து நோக்கும் பண்பு காணப்படுகின்றது. இதன்படி தனியாள் என்ற பதத்திற்கும் வித்தியாசமான அர்த்தம், வரைவிலக்கணம் இருக்கின்றது.

மேற்குநாட்டுச் சமூகங்கள் தொழிற்சாலை வளர்ச்சி, பண்ணைத்தொழில் வளர்ச்சி, தமது பொருளாதர விருத்தி மற்றும் வேறுபல காரணிகளால் தமது சமூகஅமைப்பினை தமது நாட்டுக்குகந்ததாக அமைத்துள்ளார்கள். அதன்படி "தனி மனிதன்"என்ற அடிப்படை அலகினையே தமது சமூக பொருளாதார அரசியல் கலாச்சாரத்துறைகளில் கணக்கெடுக்கும் விடயமாக முக்கியம் கொடுத்துள்ளார்கள். இதனையே சுயநிலை, சுயவளர்ச்சி, சுயமுடிவு, சுயவிருப்பம் /தெரிவு போன்ற வார்த்தைகளில் வெளிப்படுத்துகின்றார்கள்.

பல புலம்பெயர்ந்தவர்கள் நாட்டில்(உதாரணம்:இலங்கை) இந்த சுயமென்ற தனி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மனித அலகிற்குப் பதிலாக "நாங்கள்", "எமது" என்ற குடும்பம் அல்லது சிறுகுழுவின் கூட்டுநிலையே அடிப்படையாக திகழுகின்றது. இது கீழே விபரமாக சொல்லப்படவிருக்கிறது. தனிமனித தளம் என்பது புலம்பெயர்ந்த வர்களுடைய நாட்டு, சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார கூட்டுநிலையில் மூழ்கிப்போய் விடுகின்றது. அங்கு தனிமனிதராக ஒருவர் தன்னை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்தாது தன் குடும்பத்தினையோ அல்லது குழுவினையோ பிரதிநிதித்துவப்படுத்துகின்றார்கள்.

## குழு- குடும்ப தளம்:

குறிப்பாக தமிழ்க்கலாச்சாரத்தில் சிறுகுழு அல்லது குடும்பம் என்ற அலகே அடிப்படைப்பகுதியாக இருக்கின்றது. எமது நில-கடல் மூலப்பொருட்களை மையமாக வைத்து அதுவும் கிராம, சிறு-நகர கட்டுமானத்துக்குள் வாழ்ந்து வந்தோம். எமது உற்பத்தி மூலப்பொருட்கள் பொதுமையானதாக ஆக்கப் படாது, தனியார் நிர்வாகத்திலேயே விடப்பட்டுள்ளது. இந்தநிலையில் தனி மனிதனாக இயங்கும்நிலை ஒவ்வாததாக இருக்கின்றது. இந்தச் சூழலில் தான் குழு அல்லது குடும்பம் என்ற மூலஅலகு அங்கு அடிப்படையாக ஈடு கொடுக்கின்றது. ஆனால் எமது நாட்டு குடுப்ப அமைப்புமுறையினை தனியாக ஆராயும்போது பழைய கால நாற்சார வீட்டு கூட்டுக்குடும்பநிலையை விட்டுத் தனிக்குடும்பமாக (உதாரணம்: பெற்றோர், அவர்கள் பிள்ளைகள்) சில சந்தர்ப்பங்களில் பெற்றோரின் பெற்றோரை உள்ளடக்கிய வளர்ச்சி நிலையில் காணப்படுகின்றது

இக்குடும்ப சிறுகுழுநிலையைவிட 'சொந்தக்காரர்' என்ற பெருங்குழுநிலையும் மிகமுக்கியமான இன்னோர் அலகாக இருக்கின்றது. இந்தஅலகு பெரும்பாலும் இரத்த/பிறப்பு உறவு, திருமண உறவுகளால் உருவாகின்றது. இதுவே ஒரு தனிமனிதனின் உணர்வில் கலந்து அவனை தனியாக/சுயமாக இயங்கவிடாது கூட்டுமுறையில் இயங்க வைக்கின்றது எனலாம்.

## சமூக- கலாச்சார தளம்:

மேலே விபரிக்கப்பட்ட விடயம் கிழக்குநாட்டு சமூககலாச்சாரத்தின் மூலப் பொருளாக இருக்கின்றது. இதேபோல் 'தனி மனித தளம்'என்பது மேற்குநாட்டு சமூககலாச்சாரத்தின் மூலப்பொருளாக அமைகின்றது. இவ் மூலக்கருப் பொருட்களை செங்கற்களாகக் கொண்டே இரு சமூக கலாச்சாரங்களும் தத் தமது விசேட பண்புகளுடன் அமைந்துள்ளன. உதாரணமாக மேற்குநாடுகளில் உள்ள உதவிப்பணம், மற்றும் சமூகநலன் பேணும் அமைப்பு தனிமனிதனை மையமாகக் கொண்டது. எமது நாட்டு பங்கீட்டு முத்திரை, கூப்பன் முறை வீட்டுத்தலைவன், தலைவியை மையமாகக் கொண்டுள்ளதைக் கூறலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சூழல் – தளம்:

இங்கு சூழல்–தளம் என்பது இயற்கையின் காலநிலை, இயற்கைத் தாவரம், பருவகாலம் போன்றவற்றை குறிக்க பயன்படுத்தப்படுகின்றது. இந்த இயற்கைச் சூழல் கூட புலம்பெயர்ந்த மக்களில் ஒருபகுதியாகிய எம்மவர்க்கு மிகுந்த வித்தியாசம் உடையதாகவே இருக்கின்றது.

இங்குள்ள காலநிலை, பருவகால மாற்றங்கள் எமக்கு முற்றிலும் புதிதான அனுபவங்களை தந்துள்ளது என்றால் மிகையாகாது. உதாரணமாக குளிர், பனிமழை, பனிபடிவு, பனி வெள்ளை உலகம், இலைகள் எதுவுமற்ற வெறும் மரங்கள், ஊசி இலைக்காட்டு மரங்கள், நான்கு தனி விசேட பண்புகளாக அமைந்த பருவகாலங்கள், என்றுமே சுவைத்திராத பழவகைகள், புதிய பறவையினங்கள் போன்ற இன்னும்பல புதிதானவையாக இருக்கின்றது. இதேபோல் பழகிய பலவிடயங்கள் இங்கு இல்லாதும் இருக்கின்றன. சரிசமனான இரவுபகல்; எந்தநேரமும் காதில் கேட்டுக்கொண்டிருந்த கிளி, மைனா, காகம், பிளினி, கோழி, சேவல், ஆடு, மாடு, நாய், பூனை போன்றவற்றின் இயற்கை நாத ஒலிகள்; கீச்சிடுவான் பூச்சியின் இரைச்சல் ஓசை; கறுத்தக் கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான், வெள்ளைக் கொழும்பான், விலாட், கிளிச்சொண்டு,......மாம்பழங்கள்; கதலி, இதரை, செவ்வாழை, கப்பல், மொந்தன்....... வாழைப்பழங்கள்; செவ்விளநீர், சூரியகாந்தி இளநீர்......; நுங்கு, பனங்கிழங்கு, கருப்பநீர், கள்ளு.....; பல் துலக்க ஆலம்தடி, வேப்பம் குச்சி, நாக்கில் வழிக்க ஈக்கில் இன்னும் பல..... இங்கு நினைக்க நினைக்க எமது தனிமையை இன்னும் ஆழப்படுத்துவதாக இருக்கின்றது.

இந்த இரு தனியன்களான எமது வாழ்க்கையில் ஒன்று எமது மனதில், சிந்தனையில், கனவில், கற்பனையில், ரசனையில் தேங்கிப்போய் இருக்கின்றது. மற்றது வெளியுலகில் இருந்து எமது ஐம்புலன்கள் ஊடாக உள்ளே நுழைய எமது ஆறாவது புலனாகிய பகுத்தறிவை/ அநுபூதி அறிவை நாடி நிற்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் முதுமொழியின் இறுதிக்கூறான 'கால் வைக்கலாமா' என்ற உணர்வு+சிந்தனை தளம் துண்டப்படுகின்றது. இதை சிறிது ஆராயலாம்.

## கால் வைக்கலாமா? இணையலாமா?

ஒரு உயிரினம் தனது இயற்கைச்சூழலிற்கு ஏற்றவாறு தன்னை தக அமைத்துகொள்ளும் திறமையில் தான் அதன் இயற்கையான வளர்ச்சி விருத்தி நிலை செம்மையானதாக அமையமுடியும். அன்றேல் அவ் உயிரினம் பலவீன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிலைக்கு தள்ளப்படும். மிக மோசமான சந்தர்ப்பத்தில் அழிந்தும் போய் விடுகிறது. இது இயற்கைவிதி எனப்படுகின்றது. இந்த இயற்கைவிதி தாவரம், பறவை, ஊர்வன, விலங்கு, ஏன் மனிதனிற்கும் கூட மிகவும் பொருந்துவதாக இருக்கின்றது. ஆனால் மனிதன் என்ற விலங்கு தனது பல்லாயிரக்கணக்கான ஆண்டு காலத்தொடர் முயற்சியினால் மற்றைய உயிரினங்களை மிகவும் மிஞ்சிய முன்னேற்ற நிலைக்கு வந்ததுமல்லாமல், இயற்கையையே தனது கட்டுப்பாட்டிற்குள்/கையிற்குள் போடவும் ஆரம்பித்து விட்டது எனலாம்.

இன்று நாம் புலம்பெயர்ந்து வந்து தஞ்சம்கோரி வாழும் புகலிடத்தில் உள்ள நிலை இயற்கையை தனது கட்டுப்பாட்டிற்குள் ஓரளவு கொண்டு வந்து, இயற்கை விதிகளை முன்மாதிரியாக கொண்டு வேறுபல புதிதான விதிகளை உருவாக்கி இன்று அந்த புதுவிதிகளையே அடிப்படையாக வைத்து வாழ்கின்றது எனலாம். நாம் புறப்பட்டு வந்து சமூகமோ இன்னும்பல முக்கிய வாழ்க்கைத் தளங்களில் இயற்கை விதிகளையே "கடவுள்– தர்ம விதிகளாக" போற்றிப்பேணி வளர்ந்து வருகின்றது. இந்த வித்தியாசங்கள் தான் மிகக் கூடுதலாக அகதிமக்களை பொதுவாகவும், சிறப்பாக எமது தமிழ்மக்களை வினா/ எச்சரிக்கை விழிப்பு/ அவதான மனநிலைகளில் வைத்திருக்கின்றது. இங்கு நடைபெறும் செயற்பாடுகளையே நாம் இணைவாக்கம்(Integration) என்ற பொதுச்சொல்லால் அழைக்கின்றோம்.

இணைவாக்கம் பற்றி சொல்ல முன் இச்சொல்லின் கருத்துநிலை பற்றி பார்ப்போம். எமக்கு இன்று அளப்பரியசேவை செய்யும் "டெனிஷ்–தமிழ் அகராதி" இல் Integrations என்ற கூட்டுப்பெயர்ச் சொல்லிற்கும், "Integrere" என்ற வினைச் சொல்லிற்கும் பதிவுகள் உண்டு. இவைகளின் பதிவுப்படி "ஒன்றிணைப்பு", "வேற்றுமை அகற்று" என்ற தமிழ்சொற்பதங்கள் குறிக்கப் பட்டுள்ளன. இத்தமிழ் சொற்கள் இரண்டும் மட்டுப்படுத்தப்பட்ட தெளிவில்லாத, குழப்பம் தரக்கூடிய கருத்துநிலைகள் உடையதாக இக்கட்டுரையின் அமைவில் இருக்கின்றது. உதாரணமாக "ஒன்றிணைப்பு"என்பது "ஒன்றாக இணைதல்"அல்லது "ஒன்றை இணைத்தல்"அல்லது "ஒருங்கிணைதல்"என்ற கருத்துக்ளை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. மற்றும் "வேற்றுமை அகற்று" என்ற மற்றைய சொற்பதமும் முழுமையாக கருத்துக்கொண்டதாக அமையவில்லை. ஏனெனில் வேற்றுமை என்பது தனித்தன்மை தனிப் பண்புகளை கொண்டிருப்பதால் ஏற்படுவது. இத் தனித்தன்மைகள் பேணி, மாற்றி வளர்க்கப்பட வேண்டியவையே ஒழிய அகற்றப்பட வேண்டியவைகள் அல்ல.

இதனால் "ஒன்றிணைப்பு" "வேற்றுமை அகற்று"என்ற பதங்கள் 'Integration' என்ற சொல்லின் ஒரு சில பரிமாணங்களையே வெளிப்படுத்துகிறது எனலாம். கட்டுரையாளரின் கருத்துப்படி 'Integration' என்றசொல் பல கருத்துப்

( தொடர்ச்சி பக்கம் 30 )



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## யுத்தக்கருப்பை

சௌந்தர்

ஒவ்வொரு நாளும் புதுச்செய்தி.
புது எண்கள்.
வரலாறு
யுத்தத்தின் கருப்பைக்குள்.
ஓடினோம்.....ஓடினோம்
முடிவிலிவரை.
இங்கும்
விழுந்தது அடி
அங்கும் ஓடினோம்.
இங்கும் ஓடினோம்.
"அரசியல் வேண்டாமென்"றவரும்
ஓடினர்.
"தேவை"யென்றவரும்
ஓடினர்.
"வன்முறை வேண்டாம்
இலக்கியம் பேசுவோம்
எழுதுவோம் வா"
என்றவர் கற்பனையுலகில் பறக்க......
எம்கனவுகள்
கறுத்தப்
பிளாஸ்ரிக் பைக்குள்
கட்டப்படுமுன்
ஓடுவோம்.....
காலமெனும்
காட்டாற்றைச்
சிறைப்பிடித்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தூரம்

சௌந்தர்

எம்தோட்டத்தில்
கால்பதித்து
நடக்கிறேன்......
நான்வைத்த
தென்னங்கன்றுகள்
அப்படியே.......
அருகே என் அம்மாவுடன்
எம்தெருவைக் கடக்க
வந்தது DSB கியோஸ்க்.
பொரித்தகோழி
வாங்கித்தின்று....
சற்றேதூரம் செல்லுமுன்
எமைநோக்கி
சப்பாத்தொலிகள்.....
தலைதெறிக்க விரைந்தோம்.
உடல்வியர்க்க
திடுவெனவென்
போர்வையை விலக்கி
எழுந்தேன்.

பகற்கனவா......?
நண்பர்களின்
சிரிப்பொலிகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
( 27ம் பக்க தொடர்ச்சி )


பரிமானங்களை உள்ளடக்கிய ஒரு சொல். இதனால் அந்தசொல் பாவிக்கப்படும் துறைகளில் சந்தர்ப்பங்களின் தன்மைக்கு தக தன் அர்த்தத்தில் வித்தியாசப் படுகின்றது.

'Integration' என்ற சொல்லிற்கு 'முழுமையாக்கம்' 'இணைந்து முழுமையாகு' என்ற கருத்துக்களை சார்ந்து 'இணைவாக்கம்' என்ற பதம் இங்கு பாவிக்கப் படுகின்றது.

புலம் பெயர்ந்தவர்கள் இணைவாக்கத்தில் பல இணைவாக்க மாதிரிகள் (model) காணப்படுகின்றன. இதில் முக்கியமானவை நான்கு. (குறிப்பு: இங்கும் தமிழ்ச்சொல் பிரயோகத்தில் கட்டுரையாளருக்கு சிக்கல் உண்டு. வாசகர் களிடமிருந்து சரியான தெளிவான சொற்பதங்களை கட்டுரையாளர் எதிர் பார்க்கின்றார்.)

## நான்கு முக்கிய மாதிரிகளின் பெயர் வடிவங்கள்:

i) Assimilation- ஓரினவாக்கம்/ கரைசலாக்கம்
ii) Segregation- தனித்துவவாக்கம்
iii) Marginalisation- ஓரங்கட்டலாக்கம்
iv) Integration- Pluralistic-இணைவாக்கம், பன்மைத்தன்மையானது.

மேற்கூறிய நான்கு இணைவாக்க மாதிரிகளும் கட்டுரைத்தலைப்பின் "கால் வைக்கலாமா?" என்ற தளத்தில் அமைந்தனவாகும்.

## i) Assimilation - ஓரினவாக்கம்/ கரைசலாக்கம்:

இந்த ஓரினவாக்கம் எனப்படுவது புலம்பெயர்ந்தவர்கள் தமது சொந்த சமூகக் கலாச்சார விழுமியங்களை/பண்புகளை தரக்குறைவாகவோ, தேவையற்ற வையாகவோ, வேண்டப்படாதவைகளாகவோ, இழிவாகவோ.... கருதி தாம் வாழவந்த புகலிட சமூகக்கலாச்சார விழுமியங்களை சிறப்பானதாக, தமக் குரியதாக முற்றுமுழுதாக மனத்தால், செயலால் ஏற்றுக்கொண்டு வாழ ஆரம்பிப்பதாகும். இன்னோர் விதத்தில் சொன்னால் புகலிடத்தில் 'புதிய பிறப்பு எடுத்தவர்கள்' எனலாம். இவர்கள் தமது சொந்த சமூக/கலாச்சார விசேட பண்புகள், மொழி, மதம் போன்றவற்றை கைவிட்டு புகலிடத்தில் உள்ள சமூக, கலாச்சார மற்றைய பல பண்புகளை தமக்குரியதாக எதுவித அலசல்களும் இல்லாது ஏற்று 'ஓரினமாகி' விட்டவர்கள் எனலாம்.

www.tamilarangam.net



## ii) Segregation - தனித்துவவாக்கம்

தனித்துவவாக்கம் என்பது தனது சமூகக், கலாச்சார அதனுடன் சார்ந்த பண்புகளை மிகவும் புனிதமானதாக, அதிசிறப்பானதாக எண்ணி அவற்றினை எதுவித பெரியமாற்றங்களும் இல்லாது பேணிப்பாதுகாத்து தொடர்தலும், புகலிடநாட்டு சமூக கலாச் சாரப்பண்புகளை மட்டமானதாகவோ, தரக் குறைவாகவோ, அர்த்தமற்றதாகவோ தேவையற்றவையாகவோ,... நோக்கலாகும். இந்த கருத்தாக்கம் உடையவர்கள் பெரும்பாலும் தமது நாட்டு மக்களுடனும் தமது கலாச்சாரவிழா, நோன்புகளில் அதிகசிரத்தை உடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். அதேநேரம் புகலிட நாட்டு மக்களுடனோ, கலாச்சாரவிழா வைபவங்களிலோ அதிகநாட்டம் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் அனேகர் "எப்போ ஊர் செல்வோம்?", "இங்கு காசு மாத்திரம் தான் ஆனால் மனம் வெறுமையாக இருக்கு- இதுவும் ஒரு வாழ்க்கையா?" போன்ற கருத்தாடல்களில் ஈடுபடுவதையும் அவதானிக்கலாம்.

## iii) Marginalisation - ஓரங்கட்டலாக்கம்

மேலே விபரிக்கப்பட்ட இரண்டு முறைகளையோ அல்லது தனி ஒன்றையோ வாழ்ந்துபார்த்து அவற்றில் திருப்தி மனநிறைவு காணாமல் அல்லது வெறுப்பு, விரக்தியடைந்து தம்மையே இருபகுதியில் இருந்து ஓரங்கட்டி மறைவாக அல்லது தனிமையாக வாழ்தலாகும். இவர்கள் இரு கலாச்சாரங்களிலும் குறைமிருப்பதாக கூறித் தம்மை "திரிசங்கு"நிலையில் வைத்திருக்கிறார்கள். இவர்களின் நிலை பரிதாபமானது எனலாம். ஏனெனில் தம்மைதாமே கஷ்டப்படுத்துபவர்களாகவும், தமது குடும்ப எதிர்காலம், தமது சந்ததிகளின் வளர்ச்சிக்கு தாமே தடையாகவும் அமைந்து விடுகின்றார்கள். மிகுந்த கோபம், எரிச்சல், அச்சம் நிறைந்தவர்களாகவும் காணப்படுகிறார்கள்.

மேலே விபரிக்கப்பட்ட மூன்று மாதிரிகளும் குறைபாடுகள் நிறைந்த இணைவாக்கசெயற்பாடுகளாகும். இவைகள் உண்மையான அமைதி,சமநிலை, தன்மைகளை கொண்டு இருக்காததால் "கால் வைக்கலாமா?"என்ற பல பொருள்படும் நிச்சயமற்ற பண்புகளை கொண்டதாகவும், மனஅமைதியை குலைக்கின்ற அபாய சமிக்கைகளுடன் கூடியவையாகவும் இருக்கின்றன. மற்றும் புலம் பெயர்ந்த ஒருவர் இவைகளில் ஒன்றை மட்டும் தன் ஆதாரமாக வைத்து வாழ்கிறார் என்றும் தெளிவாகச் சொல்லமுடியாது. சந்தர்பங்களுக்கு ஏற்றவாறு, தேவைக்கு ஏற்றவாறு, தம் மன அறிவுக்கு ஏற்றவாறு மாற்றி மாற்றி பாவிக்கிறார்கள் எனலாம்.

இந்த மூன்று மாதிரிகளினின்றும் அர்த்தத்தாலும், செயற்பாட்டு முறைகளாலும் வேறுபட்டு நிற்பதே "இணைவாக்க" மாதிரி ஆகும். இதன் அர்த்தப்படி புலம் பெயர்ந்து வந்தோர் தமது சொந்த கலாச்சார விழுமியங்களை மொழி, சமயம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பாரம்பரிய வாழ்முறைகள் போன்றவற்றை பேணி, மாற்றி வளர்த்தெடுத்துக் கொள்ளும் அதே சமயம் புகலிட நாட்டின் சமூக-கலாச்சார பண்புகளையும் நல்மன விருப்புடன் கற்றுத்தேர்ந்து அதன்படி ஒழுகுதலாகும். குறிப்பாக டெனிஷ்நாட்டு அரசின் இணைவாக்க வேலைத்திட்டம் இக்கருத்தையே தொனித்து நிற்கிறது எனலாம். இதன் பயனாகவே புலம் பெயர்ந்தவர்களிற்கு டெனிஷ்-மொழி பாடசாலைகளும் அதே நேரம் இரண்டாம் சந்ததியினருக்கு தமிழ்மொழிக்கல்வி வசதியும், மற்றும் பிற வசதிகளும் அரசினால் வழங்கப்படுகின்றது.

இந்த இணைவாக்கமாதிரியைக் கைக்கொள்ளும் ஒருவர் தனது சொந்த வாழ்க்கை முறையிலும் பரீட்சயம் உடையவராகவும், அதேநேரம் புகலிட நாட்டுவாழ்க்கை முறையிலும் நாட்டம் கொண்டு வாழ்ந்து வருபவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

இந்த மாதிரியை கையாளுபவர்கள் பல நுட்பங்களை பாவிக்க தெரிந்தவர்கள் ஆகின்றார்கள். அத்துடன் மிகவும் அகலமான சிந்தனைப்பார்வை உடையவர் களாகவும், தனது சொந்த கலாச்சாரத்தை மதித்து, மரியாதை செய்து வாழ்ந்து கொண்டு, அதேநேரம் மற்றவர்கள் கலாச்சாரத்தையும் தன் கலாச்சாரத்திற்கு இணையானதாக மதித்து ஒப்பீடு செய்பவர்களாக காணப் படுகிறார்கள். இந்த பண்பினால் அவர்கள் சொந்தக் கலாச்சாரத்திலும் விடுபாடுகள், மாற்றங்கள், இணைதல்கள், புதுமைப்படுத்தல்கள் போன்றன ஏற்படுத்துவதுடன், வந்தேறிய நாட்டு வாழ்முறையிலும் தமக்கு உகந்ததை தெரிவுசெய்து, மற்றவைகளை தள்ளிவிடும் பக்குவம் உள்ளவர்களாகவும் உருவாகுகிறார்கள்.

இந்த இணைவாக்கப்பண்பு தமது சொந்த வாழ்வுமுறைக்கும், வந்தேறிய பெரும்பான்மை சமூகத்திற்கும் இடையிலானதாக மட்டும் இருந்துவிடாமல், அந்நாட்டில் வாழும் மற்றைய அகதி, வெளிநாட்டோர் சிறுபான்மை மக்களுடனும் நீடிக்கப்படவேண்டும் என புதியதோர்கருத்து முன்வைக்கப் படுகின்றது. இதனையே Integration- Pluralistic பன்மைத் தன்மை இணைவாக்கம் எனக் குறிப்பிடுவர்.

இனி நாம் எடுத்துக்கொண்ட முதுமொழியாகிய "இரு தோணியில் கால் வைக்கலாமா?"என்றதற்கு தீர்வாக இரு தோணிகளில் வாட்டசாட்டங்களைக் கருத்தில் கொண்டு இரண்டையும் சமாந்தரமாக, வழுகிப்போகமுடியாத படிக்கு இணைத்துக்கட்டி எமது பயணத்தை நிம்மதியாக ஓட்டிச்செல்லலாம். இந்த இருதோணி மாத்திரம் அல்ல இதேநுட்பங்களுடன் வேறுபல தோணிகளையும் எமது சிந்தனை/செயல் ஆற்றலால் இணைத்துக் கொள்ள வேண்டியசூழலில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம் என்பதை ஞாபகம் வைத்திருப்போமாக!!!

««««««»»»»»»

சஞ்சீவி 30

www.tamilarangam.net



# " தெருக்கண்ட தெரு "

அன்புடன் சஞ்சீவி வாசகர்களுக்கு!

ஏற்கனவே "சிரிக்கச் சிந்திக்க" என்ற தலைப்பின்கீழ் உங்களைச் சந்தித்த அதே முரளிதான் இந்த இதழிலிருந்து " தெருக்கண்ட தெரு" என்ற புதிய தலைப்பின்கீழ் சந்திக்கவிளைகின்றேன்.துரதிஸ்டவசமாக சஞ்சீவியில் "சிரிக்கச்சிந்திக்க" விடயங்களை என்னால் எழுதமுடியாதுபோனாலும் இப்புதிய தலைப்பினூடாக எழுதப்படும் விடையங்களும் " சிரிக்கச் சிந்திக்க"போன்றவையாகவே அமையும் என நினைக்கின்றேன்.உங்கள் விமர்சனங்களும்,ஒத்துழைப்பும் இருக்கும்வரை இதுபோன்ற விடயங்களை தொடந்து எழுதுவேன்.

......முரளி......

## இந்தமண் யாருக்குச் சொந்தம்

இது போன்ற தாவரங்கள் .....
பஸ்தரிப்பு நிலையங்கள்..........
இவையெல்லாம் என்னுடைய
வீடுகள்.என்னுடையவதிவிட
ங்கள்..........என்றான்.

1990 ம் ஆண்டு
மே மாதம்
ஒரு வெள்ளிக்கிழமை
சுமார் இரவு ஒன்பதுமணியிருக்கும்.

ஒரு மெல்லிய இரவு. சமர்காலத்து இரவு.இரண்டும் கெட்ட ஒரு பகலிரவு. உடம்பும் மனமும் அலுப்பாயிருந்தாலும் வீட்டில் இருக்கின்ற நிலையிலும் மனம் இல்லை. வெளியிலு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


லாவிவிட்டு வந்தால் உடலுக்கும் மனதுக்கும் ஓரளவுக்காவது சுகமாகஇருக்கும் எனநினைத்துக் கொண்டு வெளியே நடந்துபோகிறேன். லேசானகுளிர்காற்று உடலைச்சுகப்படுத்தி மனதையும் இதமாக்கியது.இன்னும் நட......இன்னும்நட......என்று மனமே எனக்குப்பலமுறை சொல்லிக்கொண்டது.

சனநடமாட்டமோ மிகக்குறைவு.ஆங்காங்கே வந்துகொண்டிருந்த வாகனங்கள் பெரும் இரைச்சலோடு என்னை முந்திக்கொண்டு போகின்றன.

கொஞ்சத்தூரம்தான் நடந்திருப்பேன்.வீதியின் அருகேயிருந்த Bank தாவாரத்தின் கீழே ஒருமனிதன் தலையைக்குனிந்து சப்பாணிகோலிக்கொண்டு அமர்ந்திருக்கிறான்.

அவனுக்கு அருகே...ஒரு பழுதான,ஊத்தையான,நிறம்நரைத்துப்போன குழந்தைதள்ளும் வண்டி ஒன்று. அந்த வண்டியில் நிறையச் சாமான்கள்.அதற்குமுன்னால் கறைபடிந்து பழுப்பேறியநிலையில் ஒரு அலுமினியப்பாத்திரம்.அந்தப்பாத்திரத்தினுள் எண்ணிவிடக்கூடிய அளவு துலக்கமாகத்தெரிந்த நாலைந்து இருபத்தைந்து ஊரிகள். (சதங்கள்) இரண்டு முழு சிகரட்டும் எரிந்து நூர்ந்த பாதித்துண்டு சிகரட்டும் அந்தப்பாத்திரத்தினுள் இருந்தது.

அந்தமனிதன் குனிந்தபடியே அந்தப்பாத்திரத்தை பார்த்துக்கொண்டிருக்கின்றான். அதன்வழியே வந்த ஒருவன் அந்தப்பாத்திரத்தினுள் ஒரு காசுக்குற்றியை எறிந்துவிட்டு மறைந்துபோகிறான்.

இப்போதுதான் அவன் தலையை நிமிர்த்துகின்றான்.

பியரோ வயினோ குடித்ததற்கு அடையாளமாக அவனது ஊத்தைநிற செம்பட்டைத் தாடியில் துளித்துளியாய் சில நீர்க்குமிழ்கள். அவனது தொப்பியைவிட்டுவிலகி பக்கப்பாட்டில் தொங்கும் பறட்டையடித்து காஞ்சுபோன அவனது கேசம், கழுத்தில் சுற்றப்பட்டிருந்த புளிச்சல் துணியும், அவன் போட்டிருந்த கறுப்புக்கோட்டிலும் தொப்பியிலும் இராணுவத்தளபதிகள் அணிந்திருக்கும் சின்னங்கள்போன்ற பலவர்ணச்சின்னங்களும் என்கண்களில் பளிச்சென்று தெரிகின்றது.

அவனருகில் செல்கிறேன்.என்னை நிமிர்ந்து பார்க்கிறான்.ஒரு அறிமுகத்திற்கு மெல்ல சிரித்துக்கொள்கிறேன்.

"ஏனப்பா இவன் பிச்சை எடுக்கவேண்டும்.....அதுவும் இந்த வளமான நாட்டில....எத்தனையோ நாட்டு அகதிகளை அரவணைத்து வைத்தும், எத்தனையோ நாட்டு அகதிகளுக்கென செல்வங்களை அள்ளிவழங்கும் இந்த டென்மார்க்கிலா இப்படியொரு பிச்சைக்காரன்.......? இவனுக்கு என்ன துரோகம் இழைத்தது? அல்லது இவன்தான் இந்த நாட்டுக்கு என்ன துரோகம் இழைத்தான். என்றகேள்விகள் என்மனதைக்குத்தி எழுந்து நிமிர்ந்து நின்றது.

சரி எதற்கும் இவனோடு கதைத்துத்தான் அறிந்துவிடுவோமே எனநினைத்தவண்ணம் அவனோடு கதைக்க முயல்கிறேன்.

என்னுடையபெயர் .......நான் உன்னோடு கொஞ்சம் கதைக்க விரும்புகின்றேன்.....கதைக்கலாமா? என்றபடியே கையை நீட்டுகின்றேன்.

ஓ.....இதென்ன.......நீ தாராளமாய் என்னோடு கதைக்கலாம் என்று அவன் வாயைத்திறக்க;முன் வரிசையில் நான்கு பற்களையும் காணவில்லை.

இருவரும் கைகுலுக்கிக்கொள்கிறோம்.

நீ டனிஸ் கதைப்பாயா என ஆங்கிலத்தில் அவன்கேட்க....என்னால் டனிஸ் கதைக்கமுடியு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


மௌனப்பதிலளிக்கிறேன்.

அவன் சிரித்துக்கொண்டே பக்கத்திலிருந்த வயின்போத்தலைத்தூக்கி ∴∴ VELKOM TIL DANMARK எனக்கூறுகின்றான்.

நானும் பதிலுக்கு சிரித்துக்கொண்டே அவன் அருகில் இருக்கமுயல்கிறேன்.

"ஆ........ஆ.......என்னருகில் இருக்காதே பார்ப்பவர்கள் என்னை வித்தியாசமாகப்பார்ப்பார்கள். இது உனக்கு அழகல்ல..நீ நின்றுகொண்டே கதைக்கலாம்" எனத்தடுத்துவிடுகிறான்.

"இல்லை என்னைப்போன்ற வெளிநாட்டவர்களை பெரும்பாலான டெனிஸ்மக்கள் ஏதோ ஒரு வகையில் வித்தியாசமாகத்தான் பார்க்கிறார்கள்.இதிலே எங்களுடைய சனங்களும் என்னை வித்தியாசமாகத்தான் பார்க்கிறார்கள்.

இங்கே நான் உன்னோடு சேர்ந்திருப்பதால் எதிலுமே குறைந்துபோய்விடமாட்டேன். இதனாலே எனக்கொரு பிரச்சனையும் இல்லை." எனச்சொல்லிக்கொண்டு அவனருகில் அமர்ந்துகொள்கிறேன். இரு கண்புருவங்களையும் உயர்த்தி தலையை ஆட்டி புன்முறுவல் செய்தான்.மதுபான வெக்கை மூக்கைவந்து எட்டியது.சொல்லமுடியாத மணம்.இவனோடு கதைக்கவேண்டும் என்ற ஆதங்கம் மேலோங்கி இருந்ததால் இந்த மணம் எனக்குப்பிரச்சனையாக இருக்கவில்லை.

"அதுசரி.....நீ ஏன் இதிலஇருக்கிறாய்" ஒருவித பதட்டத்துடன் கேட்டுவிடுகிறேன்.

"யாரும் எங்கேயும் இருக்கலாம் .....இதில் நான் இருப்பதால் ஒருவருக்கும் ஒரு பிரச்சனையும் ஏற்பட்டுவிடாது அதனால்தான் இங்கே இருக்கிறேன்..........***இந்த மண் யாருக்கும் சொந்தமல்ல*** என்கிறான் சிரித்தபடியே.

இல்லை நான் கேட்பது என்னவென்றால் உனக்கெனவீடோ.....அறையோ.....அல்லது ஒரு வதிவிடமோ இல்லாயா....என்பதுதான் என்கிறேன்.

இதுபோன்ற தாவரங்கள், பஸ்தரிப்பு நிலையங்கள் இவையெல்லாம் என்னுடைய வதிவிடங்கள். என்னுடைய வீடுகள்.ஆனால் நான் எங்கேயும் நிரந்தரமாக, ஒழுங்காகத் தங்குவதில்லை.தங்க வேண்டியதேவைகூடஇல்லை.

இன்றுவரையிலும் ஒருநிரந்தர வீட்டையோ அல்லது ஒரு இருப்பிடத்தையோ தேர்ந்தெடுக்கவேண்டும் என்று நினைத்ததும் இல்லை. ஏறக்குறைய எட்டுவருடங்களாக இப்படியான ஒரு வாழ்க்கையைத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்." என்கிறான் சாதாரணமாக.

உனக்கு ஏன் இப்படி ஒரு விருப்பம். இந்த நாட்டிற்தானே ஒருமனிதன் சுதந்திரமாகவும் சந்தோசமாகவும் வாழ வாய்ப்புக்கள் இருக்கின்றது. நீ ஏன் இப்படியான ஒரு வாழ்க்கையை தேர்ந்தெடுத்தாய் என வினவுகிறேன்.

பலமாகச்சிரித்தபடியே சொல்கிறான்.

யார்சொன்னார்கள் நான் சந்தோசமாக இல்லையென்று....முன்பு நான் இருந்ததைவிட இந்த எட்டுவருட வாழ்க்கையில்தான் நல்ல சந்தோசமாக இருக்கிறேன் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன்......

அப்போ எட்டு வருடத்திற்கு முன்னர் எப்படி வாழ்ந்தாய்....... கொஞ்சம் தயங்கியபடியே கேட்கிறேன். உனக்குப்பிரச்சனையென்றால் சொல்லாமல் விடலாம்.......!

ஒன்றுமே பேசாது தலையைக்கவிழ்ந்துகொண்டான். சொற்ப நிமிடங்களில் நிமிர்ந்தபடி அப்படி ஒன்றுமில்லை சொல்லலாம் என சொல்லத்தொடங்கினான்.

எனக்கென்று மனைவிபிள்ளை உறவினர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நண்பர்கள் எனப்பலபேர் இருந்தவர்கள். காலப்போக்கில் குடும்பத்தில் ஏற்பட்டகுழப்பங்களால்தான் இப்படி ஒரு வாழ்க்கைக்கு வந்தேன். எனக்கு ஒருமகள் இருக்கிறாள். பெயர் சொன்யா எனக்கூறிவிட்டு தலையைக்குனிந்து கொண்டான்.

நான் ஏதோ இவனின் சந்தோசத்தை குழப்பிவிட்டேனோ? என எண்ணிக்கொண்டேன். ஏதோதெரியவில்லை ..என்குழந்தையை தற்போது நினைக்கவேண்டியிருக்கு....இப்ப அவள் எப்படி இருப்பாள் என்பதுபோல நிமிர்ந்தபடி என்னைக்கேட்டான்.....உனக்கென்ன தெரியும் எனக்கூறி சிரித்துக்கொண்டான்.
இப்ப நினைக்கிறாய் உன்குழந்தையைப் பார்க்கவேண்டுமென்ற எண்ணம் உனக்கு ஒருபோதும் தோன்றியதில்லையா?
நான் இவ்வளவுநாளும் நினைக்கவில்லை.ஆனால் இப்பதான் எனக்கு அந்த எண்ணமே தோன்றுகின்றது. அவள் தாயைப்போல் அழகானவள். இனிமையானவள்.

> **இந்த நாட்டில் வாழ்வதற்கு எவ்வளவு வசதிகள் வாய்ப்புகள் இருக்கின்றது என்று நினைக்கின்றாயோ அந்த அளவுக்கு மக்கள்மத்தியில் அமைதியின்மையும் ............. சந்தோசமும் கெட்டுக்கிடக்கு........**

இப்படி விருப்பமுள்ள நீ ஏன் ஒரு குடும்பவாழ்க்கைக்கு திரும்பக்கூடாது.....என்னசொல்கிறான் என ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.
இப்போதைய வாழ்க்கை மிகவும் சுதந்திரமானது. சந்தோசமானது நான் யாருக்கும் பாரமில்லாதது போல் எனக்கும் ஒருவரும் பாரமில்லை. இந்த அமைதியான வாழ்க்கையைவிட்டு இன்னொரு கஸ்டநிலைக்குபோகவேண்டும் என்பது என்மனதில் கொஞ்சம்கூட இல்லை.
அப்போ மனைவிபிள்ளைகள், குடும்பம் எல்லாம் பாரம் என்று நினைக்கிறாயா?
நிச்சயமாக குடும்ப வாழ்க்கையைவிட்டு வந்தபின் இந்த எட்டுவருட வாழ்க்கையில் எந்தவிதப்பிரச்சனைகளையும் சந்திக்கவில்லை. ஆனால் குடும்பமாய் இருந்தபோது எத்தனைபிரச்சனைகளை சந்தித்திருக்கிறேன்......ஒன்றா இரண்டா.......ஒருநாளா இரண்டுநாளா.... உண்மையில் நான் இப்போது சந்தோசமாய் இருக்கிறேன்என்பது மறுக்கமுடியாத உண்மை.
அழகானவீடு...ஆடம்பரமானவாழ்க்கை மனைவி மக்கள் என இருப்பவர்கள் எல்லாம் அமைதியாக, சந்தோசமாக இருக்கின்றார்கள் என்று நினைக்கின்றாயா இல்லை மனைவி குழந்தைகள் என்று வாழ்பவன் மத்தியில் எத்தனை பிரச்சனைகள் உனக்குத்தெரியுமா? இந்தநாட்டில் வாழ்வதற்கு எவ்வளவு வசதிகள் வாய்ப்புகள் இருக்கின்றது என்று நினைக்கின்றாயோ அந்த அளவுக்கு மக்கள் மத்தியில் அமைதியின்மையும், சந்தோசமும் கெட்டுக்கிடக்கு என்பதை நீ அறிவாயா? நாங்கள் இந்த மண்ணில் வாழப்போவதோ மிகமிக கொஞ்சக்காலம். இந்த சொற்பகாலத்தில் இன்பமாக வாழவேண்டும் என நினைத்தபடியால் தான் இந்தவாழ்க்கை.
அப்படியானால் நீ ஒரு தொழிலைச்செய்து பணத்தை உழைத்து வாழலாம்தானே நீ ஏன் பிச்சை எடுக்கவேண்டும்?
ஆ......ஆ......கா......எனக்கெக்கட்டம்விட்டு சிரிக்கத்தொடங்கினான்.

**சஞ்சீவி 30**

www.tamilarangam.net



எனக்குக்கூட சிரிப்புத்தான் வந்தது.
நண்பா.....மீண்டும் சிரிக்கத்தொடங்கினான்.
பிரச்சனைகள் எல்லாம் பணத்தில்இருந்துதான் ஏற்படுகின்றது. அதாவது பிரச்சனைகள் அனைத்திற்கும் அடிப்படை ...பொருளாதாரம்தான்.மீண்டும் சிரிக்கத்தொடங்கினான்.
எனதுநோக்கம் பணம்சேகரிப்பதல்ல. இங்கே கிடைக்கும் இச்சிறுதொகை எனக்கு மிகவும் போதுமானது.
நீயே கொஞ்சம் யோசி இந்த எட்டு வருடமும் உயிரோடுதானே வாழ்ந்துகொண்டிருக்கிறேன்.
நானும் ஒன்றும்பேசாது தலையை ஆட்டுகின்றேன்.
பிச்சை எடுப்பது பற்றிக்கேட்டாய்.....இதில் என்ன பிழை இருக்கிறது? இதனால் இதுவரைக்கும் ஒருவருக்கும் பிரச்சனை இல்லை.நான் யாரையும் வலிந்து கேட்கவில்லை. விருப்பமுள்ளவர்கள் மாத்திரம் இப்பாத்திரத்தில் பணத்தைப்போடுகின்றார்கள். சிலபேர் குடிவகை வாங்கித்தருகின்றார்கள். சாப்பாடு வாங்கித்தருகின்றார்கள்.
நான் இதுவரையும் எதையும் வலிந்து கேட்கவில்லை......
அதுசரி நான் உன்னை ஒன்று கேட்கலாமா....? என என்னைப்பார்த்தான்.கண்களை உயர்த்தியபடி.
ஓ தாராளமாக கேள் என்றேன் சந்தோசமாக.
நீ என்ன பத்திரிகையாளனா....? என்னை ஏதோ பேட்டி காண்பதுபோல் எனக்குத்தோன்றுகின்றது......
இல்லை....இல்லை நான் ஒரு பத்திரிகைக்காரனுமில்லை.உங்களைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒருவரோடும் கதைத்ததில்லை. இன்னு உன்னைக்கண்டபோது கதைக்கவேண்டும் என்று விருப்பம் வந்தது.அதற்கு நேரமும் கிடைத்தது....அதுதான் கதைத்துக்கொண்டிருக்கிறேன் என்றபடி
மற்றவர்களைப்போல் நானும் உனக்கு உதவவேண்டும் என விரும்புகின்றே ன் என்று எனது பர்சிலிருந்து ஒரு 20பதுகுரோன் குத்தியை எடுத்து அவனது பாத்திரத்தில் போட்டேன்.
நேரம் போய்க்கொண்டிருக்கிறது நாளைக்கு நான் வேலைக்குப்போகவேண்டும்....எனக்கூற உடம்பைக்குலுக்கி சிரித்துக்கொள்கிறான்.
கையைக்கொடுத்தபடி எழுகிறேன்.எனக்கு இன்னும் நிறையக்கேள்விகள் இருக்கின்றது.அடுத்தமுறை வந்து கதைத்துக்கொள்ளுகின்றேன் எனக்கூறிவிட்டு அவனிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறேன்

முற்றும்.

---

அடுத்த சஞ்சீவி இதழில் 13 ..14 வயது மதிக்கத்தக்க ஒரு பொடியனும் ஒரு பூனையும் பற்றி எழுதுகின்றேன்.......

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப்போட்டி

இலக்கம் : 26

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 | 7 | ■ |
| 9 | ■ | 11 | 12 | 13 | ■ | 15 | 16 கா |
| 17 | 18 ம் | 19 | ■ | ■ | 22 | ■ | 24 |
| 25 | 26 | ■ | 28 | 29 | 30 | 31 | ■ |
| ■ | 34 | 35 | ■ | ■ | 38 | 39 சா | 40 |
| 41 | ■ | 43 | 44 அ | 45 | 46 | ■ | 48 |
| 49 | ■ | 51 | 52 | 53 | ■ | 55 | 56 |
| 57 | 58 | ■ | 60 | 61 | 62 | ■ | 64 |

### இட - வலம்

**1- 3:** இது வாசனை என்பதாகும்.
**7- 5:** இது இருந்தாலும் பொறாமை இருத்தலாகாது என்பர்.
**13-11:** இதனுள் ஏழுநாட்கள் அடக்கப்பட்டுள்ளது.
**16-15:** மழைக்காலத்தினை இப்படிச் சொல்லுவர்.
**19-17:** இது அம்பு எனப்படும். ஆனால் குழம்பியுள்ளது
**28-31:** விடிவதற்குமுன்னுள்ள பொழுது இதுவாகும்.
**34-35:** மீதி என இது பொருள்படும்.
**38-40:** இது நிறம் என்பதாகும். குழம்பியுள்ளது.
**43-46:** இதனை துயரம் எனச்சொல்லலாம். இது குழம்பியுள்ளது.
**51-53:** கடுமையான மழையுடன். காற்று வீசுதலை இப்படிக் கூறுவர்.
**57-58:** பார்ப்பவர். கேட்பவர் மனதைக் கவரும் வண்ணம் உணர்வு. உணர்ச்சிபூர்வமாக மக்களால் மக்களுக்காக வெளிப்படுத்துவது இதுவாகும்.
**56-55:** இதனை வஞ்சகமான திட்டம் என்பர்.
**62-60:** எமக்குத் தெரிந்த ஒருவர்போல் பார்வைக்கு வேறொருவர் தோன்றுதனை இப்படிச்சொல்வர்.

### மேல் - கீழ்

**1-25:** பிறப்பு நிச்சயமற்றது பிறந்துவிட்டால் இது நிச்சயமானது
**7-15:** இதனை யுத்தம் எனவும் சொல்லுவர்.
**13- 5:** கடற்கரை அண்மித்த இடத்தில் மீனவர்கள் பொருட்களை வைப்பதற்கும். ஓய்வெடுப்ப தற்குமாக அமைக்கப்படும் சிறுகுடிசை இது.
**16-24:** தவிட்டு நிறத்திலமைந்த இறகுகளையுடைய. கெளதாரிபோன்ற ஒருவகைப்பறவையின் பெயர்.
**19- 3:** இது சுமை என்பதன் ஒத்த கருத்தாகும்.
**22-46:** இதனை வானம் என்பர்.
**34-18:** இழுக்கு. பன்றி என இது பொருள்படும்.
**39-31:** பெருந்தெருவை இப்படி அழகாக கூறுவர்.
**41-57:** இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் பொருட்களில் இது பெரும் பகுதியாகும்.
**44-60:** ஒருவரின் குடியிருப்புக்கு அண்மையில் இருக்கும் வீட்டினை இப்படி அழைப்பர்.
**45-61:** கழனி என்ற நெல் பயிரிடப்படும் நிலம் இது.
**51-35:** மாமிசத்தின் நாற்றத்தினையும் இது குறிப்பிட்டாலும் நாம் புல்லுமண்டிப்போன நிலத்தினை இப்படிக் குறிப்பிடுவோம்.
**64-40:** சுகம் விசாரித்தலை இப்படிக்கூறுவர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறுக்கெழுத்துப் போட்டி பற்றிய உங்கள் கருத்துக்களையும் கோருகின்றோம். உங்கள் கருத்துக்கண்டு கு.எ. போட்டியில் மாற்றம் காணலாம். போட்டியில் கலந்துகொள்வோரது தொகை மிகவும் குறைந்து வருவதால் இப் பகுதியினை தவிர்த்துக்கொள்ளலாமெனவும் நினைக்கின்றோம். எனவே உங்கள் கருத்துக்கள் முக்கியமானதாகும்.

சஞ்சீவி உங்கள் கைகளுக்கு காலக்கிரமத்தில் கிடைத்து 15 நாட்களுக்குள் கு.எ.போட்டியின் பூர்த்திசெய்த தாளினை எமக்கு அனுப்பி வையுங்கள். முகவரி மாறியோர் புதிய முகவரியினை மறவாது அறியத்தாருங்கள். நன்றி

## குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 லி | 2 மோ | 3 றி | 4 யா | | 6 பு | 7 தி | 8 ர் |
| | 10 ர் | | 12 ழ் | | 14 வி | 15 ட | 16 ம் |
| 17 த | | 19 தோ | 20 ப் | 21 பு | | 23 ம் | 24 வ |
| 25 ர | 26 த | 27 ம் | 28 பா | | 30 மா | | 32 க |
| | 34 ம் | 35 பு | 36 ண | 37 ரா | | 39 சே | |
| 41 ணி | 42 பி | | 44 ம் | | 46 அ | 47 ரி | 48 மா |
| 49 ண் | | 51 கு | | 53 லை | 54 க | | 56 த |
| 57 க | 58 ய | 59 ல் | | 61 அ | 62 தி | 63 வு | 64 ர் |

இலக்கம் : 25

**கு.எ. போட்டி இல. 25 விடைகள்**

⇒
1- 4: லிமோறியா
6- 8: புதிர்
14-16: விடம்
19-21: தோப்பு
28-25: பாரதம்
30 : மா
34-37: புராணம்
42-41: பிணி
46-48: அரிமா
57-59: கயல்
54-53: கலை
61-64: அதிர்வு

⇓
2-10: மோர்
4-44: யாழ்ப்பாணம்
6-14: புவி
7-23: திடம்
17-25: தர
19-35: தோம்பு
26-42: தம்பி
32- 8: கர்வம்
39-47: சேரி
46-62: அகதி
48-64: மாதர்
57-41: கண்ணி
61-53: அலை

பரிசு பெறுவோர்:
1. S. Rajagopalan, 9000 Aalborg
2. V. Nathan, 5800 Nyborg



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# பண்டிதர்கள் பதில் சொல்லட்டும்

.............................................. *எம்.வெலிங்டன்*

இன்று ஈழத்தில் வடமாகாணத் தமிழரிடையே Tஎன்ற ஆங்கிலஎழுத்தை தமிழில் எழுதும்போது 'ரி' என்ற தமிழ்எழுத்தை பயன்படுத்தும்பழக்கம் இருந்து வருகின்றது.ஆனால் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஈழத்தின் சிலபகுதிகளில் Tஎன்ற ஆங்கிலஎழுத்தை தமிழில் எழுதும்போது 'டி'என்று எழுது கிறார்கள். அப்படி அவர்கள் எழுது வதற்கு ஒரு இலக்கணரீதியான காரணமும் உண்டு. தமிழ்இலக்கணத் தில் ஒரு மாத்திரை அளவு உச்சரிப்பு, இரு மாத்திரை அளவு உச்சரிப்பு என்ற உச்சரிப்பு இலக்கணம் ஒன்று உண்டு. உதாரணமாக படி என்ற சொல்லை நாம் உச்சரிக்கும்போது 'டி'எழுத்தை அழுத்த மாக உச்சரிப்பதால் அதற்கு இரு மாத்திரை அளவு உச்சரிப்பு என்றும், ஈட்டி என்றசொல்லை நாம் உச்சரிக்கும் போது 'டி' எழுத்தை மென்மையாக உச்சரிப்பதால் அதற்கு ஒருமாத்திரை அளவு உச்சரிப்பு என்றும் அளவாகும். இப்படி இருவழிகளில் உச்சரிக்க வேண்டிய பல எழுத்துக்கள் உள. (உதாரணம்: க,த,ப). அதனால்தான் மற்றய தமிழர்கள் எல்.ரி.ரி.ஈ என்று எழுதாது எல்.டி.டி.ஈ என்று எழுது கிறார்கள். மேலும் 'ரி' என்ற எழுத்திற்கு Tஎன்ற உச்சரிப்பைக் கொடுத்தால் சரி, வரி, கரி போன்ற சொற்களை எப்படி உச்சரிப்பது?

**Tஎன்று ஒலிவர 'ரி'என்ற எழுத்தை பயன்படுத்தலாம் என்ற ஏதாவது இலக் கணரீதியான விதிமுறைகள் உண்டோ?** ஒரு இந்தியத்தமிழர் 'நான் எல்.ரி.ரி.ஈ இல் இருந்தேன் என்று ஒப்புதல் வாக்கு மூலம் அளித்துவிட்டு, பின் அப்படி ஒரு இயக்கம் உலகத்தில் இல்லை யென்று வாதாடலாம் அல்லவா? Tஎன்ற ஆங்கில எழுத்திற்கு தமிழில் 'ரி'என்ற எழுத்தை எழுதலாம் என்று யாரால் எந்த இலக்கணரீதியாக அறிமுகப்படுத் தப்பட்டது என்று சரியான விளக்கம் அளிப்பவர்களுக்கு கலைஞர்.கருணாநிதி யால் எழுதப்பட்ட மூன்று புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும். வெறும் உச்சரிப்பு ரீதியாக விளக்கம் தந்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. கடவுளே! தமிழர்கள் எழுத்திலுமா வேறுபட்டு இருக்கிறார்கள்.!

## ஹிட்லர் - கிட்லர்

இரண்டாவது ஹிட்லர் என்ற பெயரை தமிழில் சிலர் கிட்லர் என்றும் ஹோர்ணிங் என்ற சொல்லை கோர்ணிங் என்றும் எழுதுகிறார்கள். ஏன் இந்த தமிழரின் வாயில் ஹோ, ஹி சத்தம் வரமாட்டேன் என்கிறது.? காரணம் வெறும் வறட்டு வேதாந்தம். ஒருவர் கூறுகிறார் நாம் சமஸ்கிருத எழுத்துக்களை பாவிக்கக் கூடாது என்று. ஒரு கல்யாணவீட்டில் வேதியர் ஒருவர் மந்திரங்களை ஓதும் போது ஹோ என்ற எழுத்தை சரியாக உச்சரிக்காது கோ என்று உச்சரித்தால் எல்லாம் அமங்களமாகிவிடுமே.! வேறு மொழிகளை நாம் படித்து அதைசரியாக உச்சரிக்கவேண்டும் ஆயின் சமஸ்கிருத எழுத்துக்களை பாவித்தாக வேண்டும். அப்படி அவ்வெழுத்துக்களை பாவிக்க

( தொடர்ச்சி பக்கம் 16 )

www.tamilarangam.net



# காத்திருக்கும்நேரங்கள்...............

.......................................................முல்லையூரான்........



நான் ஒரு ஓவியன். நல்ல உருவங்களுக்காக காத்திருப்பவன். சூரியனின் உதயம், மறைவு என்பனவற்றை காத்திருந்து பிரதிசெய்பவன். ஒரு மொட்டு மலராகும்வரை காத்திருந்து அதை ஓவியமாக்கும் விருப்பமுள்ளவன். காதலிக்காக புற்தரையில் காத்திருந்து எத்தனையோ புற்களை சப்பித்துப்பியவன். பஸ்சுக்கு, புகையிரதத்திற்காக காத்திருந்து காலத்தை சபித்தவன்.

ஆனால் இன்று வேறொன்று. எனது அம்மம்மா தூரஇடத்திலிருந்து இரவுப்புகையிரதத்தில் வருகின்றாள். நான் அவளை வீட்டுக்கு அழைத்துப்போதல்வேண்டும். அவள் வயதானவள். 12 வருடங்களாக நாங்கள் ஒருவரை ஒருவர் பார்க்கவில்லை. இன்றுதான் சந்திக்கப்போகின்றோம்.

மனதுக்குள் அவளே நிறைந்துபோயிருந்தாள். மகிழச்சி ஒருபுறம். அவள் வரவு தரும் அந்தரஉணர்வு மறுபுறமுமாக எனது குளிராடையை சரிசெய்துகொண்டு கொப்பனேகன் புகையிரதநிலையத்துள் நுழைகிறேன்.

நேரம் அதிகாலை 04.00 மணி. அங்கே அமைதி சூழ்ந்திருந்தது. அப்புகையிரதநிலையம;இன்னமும் விழிக்காத ஒருகண்நித்திரை.

நிலத்தில் புறாக்கூட்டங்கள் இரைதேடிக்கொண்டிருந்தன. கடதாசி, பழத்தோல்கள், சிகரெட் அடிக்கட்டைகளென கஞ்சல்கள் ஆங்காங்கிருந்தன.அந்த விசாலமான மண்டபத்தின் ஒருமூலையிலிருந்து ஒருவன் அக்கஞ்சல்களை துப்பரவுசெய்யத்தொடங்கிவிட்டிருந்தான்.

எனது சப்பாத்தோசைக்கு புறாக்கள் வெருண்டெழுந்து மேல்தீராந்திமீது அமர்ந்துகொண்டன.அதுவே அவற்றின் வாழிடம். இவைகள் எதற்கும் காத்திருப்பனவல்லவே... சிந்தும் உணவுகள் அவற்றின் நம்பிக்கை.அவற்றை உண்பது அவற்றின் வேலை. உறங்குதல் ஓய்வு.விழித்தல் மீண்டும் சிந்தியவைகளுக்காக. இவை காத்திருப்பற்ற சந்தோசமான உயிர்கள்.

அப்புகையிரதநிலையத்தில் இரவுவிளக்குகள் மங்கியபடி எரிந்தன. கரைதட்டிப்போன ஒரு திமிங்கலம்போல அது கிடந்தது.ஓரிரண்டு ஒலிபெருக்கி செய்திகள் வந்துபோனது.யாரோ ஓரிருவர் புகையிரதத்திற்காக காத்திருந்தனர். அவர்கள் அடிக்கடி மணிக்கூட்டை பார்த்தும் கொண்டனர்.

ஒரு ஓரமாக அமர்ந்துகொண்டேன்.வரும்போது கூடவே எடுத்துவந்திருந்த சித்திரம் வரையும் தாள்களையும், பேனாவையும் எடுத்துக்கொண்டேன்.

எனது கை மணிக்கூட்டைத்தூக்கிக் காட்டிவிட்டு முழங்காலில் மடிந்திருந்தது. அம்மம்மா வருவதற்கு இன்னமும் அரை மணிநேரம் உண்டு.அதற்குள் ஏதாவது வரையவேண்டுமென தீர்மானித்துக்கொண்டேன்.

அம்மம்மாவின் நினைவே மீண்டும் என்னுள் தொற்றிக்கொண்டது. அவள் நன்றாகத் தூங்கியிருப்பாள். வந்தவுடன் ஒரு கோப்பி வாங்கிக்கொடுக்கவேண்டும். பின்னர்................ நினைவுகள் அவளைச்சுற்றியே இருந்தன. வரைய எடுத்தபேனா தோள்மூட்டில் குந்திய நுளம்பைப்போல இருந்தது. அது ஒன்றை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


யும் கீறக்காணோம்.

இன்னமும் விழித்துக்கொள்ளாத இந்தப்புகையிரதநிலையத்தில் நிலவும் அமைதியான சூழல் மெல்லமெல்ல கலைய ஆரம்பிக்கிறது பயணிகளின் இலக்கங்கள் அதிகரிக்கிறது.

மனதுக்குள் சூழலின் சந்தடியையும் தள்ளிக்கொண்டு அம்மம்மாவின் வருகையை மனம் சரிபார்த்துக்கொள்கிறது.

எல்லாம் சரி. ஆனால் அம்மம்மா இன்னமும் வரவில்லை.

தவிப்பு......

நேரம் நீள்வதுபோன்ற உண்மையல்லாதநிலை. அம்மம்மா வரப்போகிறாள் என்ற தவிப்பில்..... எதையுமே கீறாது பேனா பேப்பரிலிருந்து இறங்கிக்கொள்கிறது.

இரவுப்புகையிரதம் வரும்நேரத்தை முன்னாலுள்ள சிறிய தொலைக்காட்சி காட்டியபடியே இருக்கிறது. எத்தனை தடவை அதனைப்பார்த்துவிட்டேன்.

அம்மம்மா வருவதற்கு இன்னமும் 20 நிமிடங்கள் இருப்பது உண்மை. ஆனால் அதையும் மீறி எப்போது...... எப்போது .......... என்ற எண்ணமே தலைவிரித்திருக்கிறதே! சரி.....மனதை இறுக்கிக்கொள்கிறேன். அம்மம்மாவை மறந்துவிடுகிறேன். பேனா மீண்டும் சித்திரப்பேப்பரில் குந்திக்கொள்கிறது.

சரி ....என்னவரையலாம்?

அதோ...எதிரே தொலைபேசியில் கதைத்தபடி ஒருவன் பின்பொக்கற்றுக்குள் கைவைத்திருக்கிறானே......அவனையா?

அல்லது......

இராமுழுக்க மதுவருந்திய கசங்கல் முகத்தோடு ....சிகரட்டின் கடைசி இழுப்போடு கையைச் சுட்டுக்கொள்ளும் அந்தப் பீத்தல் காற்சட்டைக்காரனையா?

அல்லது......

சூட்கேசை இழுத்துக்கொண்டு அவசரிக்கும் அந்த இளமஞ்சள் மங்கையையா......?

அல்லது.........

அந்தத்தேனீர்ச்சாலை திறக்கப்படுவதற்காக வாசலில் காத்திருக்கும் அந்த மூன்றுபேரையுமா?

இல்லை.....இவனை வரையலாமா.....?

நீலநிற சீருடையில் வந்து சுறுசுறுப்பாக திரும்பிப்போகும் அந்த போலீஸ்காரனையா...? அவனும் திரும்பிப்போய்விட்டான்.

இந்தத்தெரிவுக்கான அந்தரிப்பலைச்சலிடையே எனதுபேனா ஒரு பேப்பர்முழுவதிலுமே கிறுக்கி நிரப்பிவிட்டது.

அதையும் கிழித்து குப்பைத்தொட்டியில் வீசினேன்.

மீண்டும் எனதுபேனா புதியபேப்பரொன்றில் குந்திக்கொண்டுவிட்டது.

நேரம்ஆக.....ஆக.....அம்மம்மா வந்து வந்து போனாள்.

கொஞ்சச்சனம்வந்து புகையிரதத்திற்கு அள்ளி அடித்துக்கொண்டு ஓடியது.

எனக்குப்பிடித்தமாதிரி ஒருவன் அதோ நிற்கிறான் ......அவனை வரையலாம்.

....கறுப்புக்காற்சட்டை, கறுப்புக்கோட், வெள்ளை ரை இறுக்கத்தில் இறுகிப்போய்க் கிடக்கும் தசைஉப்பியதொண்டை; மேலே தலை......அதைப்பற்றி சொல்ல அதிகமில்லை. வலதுகையில் சூட்கேஸ்

இடதுகால் சப்பாத்துநுனியால் வலது கணுக்காலை உரஞ்சிக்கொள்ளுகின்றான்.

....கையில்கிடந்த பேப்பர்த்துண்டு மூக்கை மறைக்க .......தும்மினானா....?

கிரோமோவில் அந்தக்குண்டுவிழுந்ததுபோல.... அம்மம்மா நினைவில் வந்தாள். இன்னமும் நேரமிருக்கிறது.

அதோ அவனை வரைந்தாலென்ன...?

கையில் காலைத்தினசரிக்குள் கண்ணாட்டும் அவன். வாட்டசாட்டமான ஆள்.

வண்டி சரிந்து எந்தநேரத்திலும் விழலாம்.

அவன் காலடியில் ஒரு நாய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கறுப்பும் வெள்ளையும் கலந்தாற்போல்....... வடிவாக இருந்தது.

தினசரியை தலையணைபோலாக்கிக்கொண்டு.................. அவனுக்கும் அவசரம்.

நாய்க்குமுன்னால் போய்க்கொண்டிருந்தான்.

எனது சித்திரப்பேப்பரைப்பார்த்தேன்.....மீண்டும் அதே கறுப்புக்கிறுக்கல்களேதவிர....ஒன்றுமில்லை.

கசக்கி குப்பைத்தொட்டியிலிட்டேன்.

கை; மணிக்கூட்டை தூக்கி எனக்குக் காட்டிற்று.

ஆம் இரவுப்புகையிரதம் இன்னும் 5 நிமிடத்தில் வந்துவிடும்....அம்மம்மா வந்துவிடுவாள்.

நிமிடங்கள் நகர மறுத்தன.

எழுந்து நின்றேன்.

முன்னாலும், பின்னாலும், பக்கவாட்டிலும் நடந்துபார்த்தேன்.

-புகையிரத ஒலிபெருக்கி சொல்லிற்று---"-வரும் புகையிரதம்-15நிமிடங்கள் தாமதித்தே வந்து சேரும்" என்று

மீண்டும் உட்கார்ந்துகொண்டேன்.

என்தலை குனிந்தது.

இடதுகை அதனைத் தாங்கிக்கொண்டது.

எதுவும் என்னால் கீறமுடியவில்லை.வெறும் மேலோட்டமான பார்வைதான்.

எதுவும் என்னுள் தங்கவில்லை.

நான் மட்டுமல்ல இங்கு யாரும் எதுவுமே செய்யவில்லை.எல்லோருக்குள்ளும் ஒரே உணர்வுதான்போலிருக்கிறது.

பயணிகள் தங்குமிடமும், காத்திருக்கும் நேரமும்–இடமுமே இது.

இங்கே.....எதையும் செய்தல்முடியாது .......... இந்த எண்ண அலைகளுக்குள் நான் சிக்கிக் கொண்டிருந்தபோதுதான் அவன் வருகிறான்.

மெல்லியதோற்றம், தெளிவான சிரித்தமுகம், கறுப்புத்தலை, மண்ணிறத்தோற்றம்.

என்னைக்கடந்து சென்ற அந்த இளைஞன் எதிரிருக்கையில் அமர்கிறான்.

இவன் ஸ்ரீலங்காவிலிருந்து வந்த தமிழ் அகதியாக இருப்பான் என நினைத்துக்கொள்கிறேன்.

தனியே-பணிவோடு-...கால்களுக்கிடையே கைகளை இறுக்கியபடி இருந்தான்.

ஏதோ உணர்வு உந்த அவனருகில் சென்று.. எனதுபெயர்-ஊல...என எனதுபெயரைச்சொல்லி அறிமுகம் செய்துகொண்டேன்.

எனதுபெயர் "நாதன்" என தன்னை அறிமுகம் செய்தான் அந்த இளைஞன்.

............

---------இவ்வாறாக ஒரு வெளிநாட்டவருக்கும் டனிஸ்காரருக்குமிடையே நடைபெறும் சாதாரண உரையாடலின்பின்...

நீர் என்னசெய்கின்றீர்...எனக்கேட்டேன்.

பலதொழில்கள்செய்துவிட்டு இப்போது சும்மா தான் இருக்கிறேன் என்றான் அவன்.

எமது டனிஸ் சமூகத்தில் தொழில் என்பது நிரந்தரமற்றதொன்றுதான்.

ஆனால் பெரும்பாலானவர்கள் ஏதாவது ஒரு துறைசார்ந்து தேர்ச்சிபெற்றவர்களாக இருப்பார்கள்.

ஆனால் இப்படி பெரும்பாலான வெளிநாட்டவர்களால் ஆகமுடிவதில்லை.

காரணம்.....டென்மார்கில் வாழும் வெளிநாட்டவர்கள் இந்தநாட்டை ஒரு நிழல்நாடாகவே நம்புகின்றார்கள்; வாழ்கிறார்கள்.

காத்திருப்பவர்கள் அந்நேரங்களில் எதையும் நிரந்தரமாக உற்பத்திசெய்வதில்லை.

ஒலிபெருக்கி சொல்லிற்று-----இரவுப்புகையிரதம் வருகிறதாம்.

எனது அம்மம்மா வருகிறாள்.

இருவரும் அணைத்து முத்தமிட்டுக்கொள்கிறோம்.

இரவுத்தூக்கம் கலைந்து பயணிகள் நெருசினர்.

அந்த ஸ்ரீலங்கா அகதியைப்பார்த்தேன்.

அவன் அங்கேயே இருந்தான்.

நான் கிறுக்கிய சித்திரப்பேப்பர்கள் குப்பைதொட்டியில் கிடந்தன.

புகையிரதநிலையத்தில் இப்போது புதியவர்களே நிறைந்திருந்தார்கள்.

இதனுள் அவனும்......................

முற்றும்

சஞ்சீவி 30

www.tamilarangam.net


# சிகரங்கள்! சிகரங்கள்!

தன்முதுகில் சீழ் வடியும்!
தானுமதை தான் அறியார்!
மற்றவர் முதுகு மறு..!
மணக்கிறது என்பார்....!

பட்டம் பல பெற்றிருப்பர்! மக்களுக்கு
பயன்படுத்த மறுத்திருப்பார்!
நாயின் வால் தேன்போல!
நாட்டிடையே வாழ்ந்திருப்பார்.!

மேடை தனில் ஏறார்...! மக்கள்
மேன்மைக்கு வழி கூறார்...! ~ மற்றவர்
மேடை தனில் ஏறி ~ மக்கள்
மேன்மைக்கு வழி சொன்னால்.!
மேதையா இவன் என்று!
கேலி தான் செய்வார்.

பதவிக்கு ஆசை கொள்வார்.! அந்த
பக்குவத்தில் வாழார்...!
மற்றவர் வளர்ச்சி கண்டால்.!
மனம் பொறுக்க மாட்டார்!
வார்த்தையில் விஷம் கலப்பார்!
வசை மாரி பொழிவார்.!

மண்ணுக்குள் வளங்கள் பல! ~ சில
மனிதர் இதை அறியார்!
மனிதருக்குள் திறமை பல! சில
மனிதர் இதைப் புரியார்!
எல்லாம் தெரிந்தவன் போல்.!
ஏழனங்கள் தான் புரிவார்....!

மொத்தமாய் இத்தனையும்!
சொந்தமாய் கொண்டவரே!
பொறாமையின் சிகரங்கள்
புரிந்திடுங்கள் புரிந்து நடந்திடுங்கள்!

**வேலணையூர் பொன்னண்ணா**

சஞ்சீவி 30

www.tamilarangam.net



# போர்க்குற்றவாளிக்கு டென்மார்க்கில் 8வருடச்சிறைத் தண்டனை

போர்க்காலத்தில் சிறைச்சாலை ஒன்றில் கைதிகளுக்கு எதிராக புரிந்த குற்றங்களுக்காக போஸ்னியாவைச் சேர்ந்த Refic Saricஎன்பவருக்கு டெனிஷ் உயர்நீதிமன்றம் 8வருட கடுங்காவல் சிறைத் தண்டனையை விதித்துள்ளது. 1994இன் ஆரம்பத்தில் அகதியாக டென்மார்க்கிற்கு வந்த Refic Saric ஏனைய போஸ்னிய அகதிகளால் மேற்படி குற்றங்களுக்காக அடையாளம் காணப்பட்டார். Dretelj என்ற இடத்திலுள்ள சிறைச்சாலையில் ஒரு கைதியாக இவர் இருந்தபோதும் மற்றய தனது சககைதிகளுக்கு எதிராக பல குற்றச்செயல்களைப் புரிந்ததாக குற்றம் சுமத்தப்பட்டார். முன்பு மேற்படி சிறைச்சாலையில் இருந்து தற்போது டென்மார்க்கில் அகதிகளாக இருப்பவர்கள் இவருக்கு எதிராக அடித்துத் துன்புறுத்தினார், கொலை செய்தார் போன்ற 20 பலமான குற்றங்களைச் சுமத்தியுள்ளனர்.

இவ்வழக்கின் விசாரணைகளின் போது பலர் சாட்சியமளித்தபோதும், இக்கொடுமையான சம்பவங்களை விபரிக்கமுடியாமல் பலர் கஷ்டப்பட்டனர். சிலர் சாட்சியமளித்துக் கொண்டிருந்தபோது மயக்கமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். சிலர் பயத்தினால் நீதிமன்றத்திற்கு சமூகமளிக்கவே மறுத்துவிட்டார்கள்.

Refic Saricக்கு வழங்கப்பட்ட இத்தண்டனை மூலம் முன்னைய யூகோஸ்லாவியாவில் நடைபெற்ற போர்க்காலச் குற்றச்செயல்களுக்காக வேறு நாட்டில் விசாரணைநடாத்தி தண்டனை வழங்கும் முதலாவது நாடாக டென்மார்க் விளங்குகின்றது. போர்காலச் குற்றச்செயல்களுக்காக வேறு ஒரு நாட்டில் விசாரணை நடாத்தி தண்டனை வழங்குவது சட்டப்படியானது. இதைத் தொடர்ந்து பலவழக்குகள் நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு வர விருக்கின்றது. ஐக்கியநாடுகள் சபையும் Haag என்ற இடத்தில் மேற்படி வழக்குகளை விசாரிக்க ஒரு விசேட நீதிமன்றத்தை நிறுவியுள்ளது.

Refic Saricக்கு வழங்கப்பட்ட இத்தண்டனை டென்மார்கைப் பொறுத் தளவில் மிகவும் கடுமையானது. மேற்படி சிறைச்சாலையில் நடைபெற்ற சித்திரவதைகளுக்கு Refic Saric பொறுப்பல்ல, அவர் நிர்பந்தங்களினால்தான் இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என்று Refic Saric சார்பில் ஆஜரான வழக்கறிஞர் வாதாடியபோதும், நீதிபதி மேல்உயர்நீதிமன்றத்திற்கும் 8வருடச்சிறைத் தண்டனை கட்டாயம் உறுதி செய்யப்படவேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளார்.

–ரவி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சிறப்பு (சித்தரவதை) முகாம்கள்

—தமிழரசன்

ஐரோப்பிய நாடுகளில் அனுமதிக்கப் பட்ட ஈழத்தமிழ் அகதிகளுக்கு அவர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு உதவிகள் வழங்குவதுடன், காலப் போக்கில் குடியுரிமையும் வழங்கப்படு கிறது. ஆனால் தமிழகத்தில் அனுமதிக்கப் பட்ட அகதிகளின் நிலையோ மிகமிக மோச மாக, பரிதாபமாக இருக்கின்றது. வழங்கப் படும் உதவிகளோ மிகவும் குறைவு அது கூட ஒழுங்காக அகதிகளின் கைக்குச் சேராமல் இடையில் வழங்கல் 'அதிகாரி களினால் கொள்ளையடிக்கப்படுகிறது. இது குறித்து தனது அதிர்ப்தியைத் தெரிவித்த அய்.நா அகதிகள் புனர்வாழ்வு ஸ்தாபனம், தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளை தனது பொறுப்பில் எடுத்துக் கொள்வதாகக் கூறியது. இந்திய அரசு அதற்கு மறுப்புரை கூறிவிட்டது. ஆனால் அகதி களை இங்கிருந்து பலிக்கடாவாகத் திருப்பி அனுப்புவதிலேயே மத்திய/மாநில அரசுகள் குறியாக இருக்கின்றன. இந்திய, தமிழ்நாடு, அரசுகள் ஈழஅகதிகளுக்கு அகதி என்ற அந்தஸ்து கொடுக்கவில்லை. ஏனெனில் அகதி அந்தஸ்து கொடுத்தால் சர்வதேச அகதி சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்என்பதால் அவ்வாறு செய்யா துள்ளன.

''தமிழகத்தில் நடைபெறும் கொலை, கொள்ளைகளுக்கு அகதிகளாக தங்கியிருக் கும் ஈழத்தமிழர்களே காரணம்; எனவே அகதிகள் யாவரும் உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும்'' என்று தமிழக முதல்வர் சட்டசபையில் பொறுப்பற்ற முறையில் பேசியதையடுத்து இன்று ஈழத் தமிழ் அகதிகளுக்கு பாதுகாப்பற்ற சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. மத்திய/மாநில அரசு கள் தமக்கிடையேயான மோதல்களில் ஈழத்தமிழ் அகதிகள் பிரச்சனையை சுயநல அரசியல் நோக்கில் அணுகுவது இவ்அகதி களின் நிலமையை மேலும் மேலும் மோச மாக்குவதாவே அமைகின்றது. ஈழத்தமிழ் அகதிகள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல; உலகின் பல நாடுகளில் தஞ்சமடைந் துள்ளனர். ஆனால் தமிழக அரசைத் தவிர வேறு எந்தவொரு அரசும் இதுவரை ஈழத் தமிழ் அகதிகளை குற்றவாளிகளாகவோ அல்லது பயங்கரவாதிகளாகவோ சித்தரிக்க வில்லை. அதுமட்டுமல்ல, திரும்பிச் செல்லும் படி வற்புறுத்தவு மில்லை.

ஆனால் தமிழக அரசு மட்டும் அனைத்து அகதிகளையும் பயங்கரவாதிகளாகக் காட்டும் சுபாவம் தொடர்கிறது. ஒரு சில அகதிகள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம். அவர்கள் சட்டப்படித் தண்டிப்படுவதை யாரும் குறை கூற வில்லை. ஆனால அதைவிடுத்து ஒருசிலர் செய்வதை அனைத்து அகதிகளும் செய்வதா கவும், பயங்கரவாதிகளாக சித்திரிப்பது. தவறாகும். இவ்வாறு சித்திரித்து அதன் மூலம் அனைத்து அகதிகளும் வெளியேறும் படி நிர்ப்பந்திப்பது எந்தவிதத்திலும் நியாயம் இல்லை.

தமிழக முதல்வரின் பொறுப்பற்ற பேச்சு, தமிழகப் பொலிகாரரின் அராஜகத்தை ஊக்கப்படுத்துவதாகவே உள்ளது மாதக் கடைசியில் வழக்கு எதுவுமே கிடைக்க வில்லையெனில் உயர் அதிகாரிகளுக்கு கணக்கு காட்டுவதற்காக அருகில் இருக்கும் அகதிமுகாமில் இருந்து அப்பாவி அகதி களைப் பிடித்துச் சென்று பொய் வழக்குப் போடுவதை தமிழகப் பொலிகாரர்கள் ஒரு வாழ்க்கையாகவே கொண்டுள்ளனர். இதனால் மாதக்கடைசியென்றால் தமிழ கத்தின் முகாம்களிலுள்ள அகதிகள் வெளி யில் வருவதற்கே அஞ்சுகின்றனர். அதுமட்டு மல்ல முகாமில் காவல்புரியும் பொலிசார் தமது இச்சைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அகதிப்பெண்களைப் பாலியல் நடவடிக்கை களுக்கு கட்டாயப் படுத்துகின்றனர். அகதிப் பெண்ணை யார் அனுபவிப்பது என்ற மோதலில் ஒரு பொலிஸால் ஒரு ஏட்டு சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் யாவரும் அறிந்ததே மதுரைமுகாமில் நடைபெற்ற இச்சம்பவம் அனைத்து முகாம்களுக்கு ஒரு உதாரணமாகும். நான்கு வருடங்களாக பதிவு செய்யப்பட்டு முகாமில் தங்கியுள்ள வர்களைக் கூட ''பாஸ்போர்ட்'' வழக்குத் தொடுத்து சிறையில் போடுகின்றனர். இது கூட பரவாயில்லை யென்றால் இதைவிட மோசம் என்னவெனில் ஒரே நபருக்கு பல முறை ''பாஸ்போர்ட் கேஸ்'' போடப் பட்டுள்ளது. இதனை அவதானித்த நீதிபதி பொலிஸாரை எச்சரித்தும் கூட இவ்வா றான சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே யிருக்கின்றன.

பஸ் கொள்ளை தொடர்பாக கைதுசெய்யப் பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப் பட்ட ஷோபன் என்ற அகதிக்கு 21.03.94 அன்று நீதிமன்றத்தில் ஜாமின் வழங்கப் பட்டது. ஜாமின் வழங்கப்பட்டும் அவரை விடுதலை செய்யாமல் சிறை நிர்வாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்ட இவ்வகதி அடுத்த நாளே கஞ்சா ''கேஸ்'' போடப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப் பட்டுள்ளார். இதுகுறித்து இப்பகுதி நீதிபதி மற்றும் உயர் அதிகாரிகள் அனைவருக்கும் மனு கொடுத்தும் இதுவரை எவ்வித பலனு மின்றி சிறையில் வாழ்கிறார்.

வேலூர் சிறப்புமுகாமில் ஹைதர் மகாலில் காவலுக்கு நின்ற ஒரு பொலிஸ் அங்கு அடைத்துவைக்கப்பட்ட ஒரு அகதிப் பெண்ணை பாலியல் நடவடிக்கைக்கு கட்டாயப் படுத்தினார் ஆனால் அப்பெண் அதற்கு இணங்காததால் அப்பெண்ணின் மீது கஞ்சாகேஸ் போடப்பட்டு வேலூர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். இவ்வாறு பொய் கேஸ் போடப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதால், பயந்த அகதிப் பெண்கள் வேறுவழியின்றி காம இச்சைக்கு உடன்படுகின்றனர் (10.6.92 இல் இச்சம்பவம் நடைபெற்றது)

மணப்பாறை என்னுமிடத்தில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்த இளம்பெண் ஒருவரை அம்முகாம் பொறுப்பதிகாரியான தாசில்தார் அடிக்கடி அழைத்துச் சென்று லாட்ஜில் தங்கி இன்பம் அனுபவிப்பதுண்டு. இவ்வாறு ஒரு அதிகாரி ஒரு அகதிப் பெண்ணுடன் தகாத உறவு கொள்ளவதைக் கண்டித்த 85வயது கந்தையா என்ற அகதியை புலி எனக் குற்றம் சுமத்தி சிறப்பு முகாமில் அடைத்துள்ளனர்.

பணம் பெற்றுக்கொண்டு சிலரை விடுதலை செய்வது, பணம் கொடுக்க முடியாத அப்பாவி அகதிகள் மீது பொய் வழக்குப் போடுவது- போலிஸாரின் இவ்வாறான அராகஜங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

ஈழத்தமிழர்கள் மீது தமிழக அரசினால் இழைக்கப்படும் கொடுமைகளில் மிகக் கொடுமையானதும் வெளி உலகிற்கு அதிகம் தெரியாததுமான இன்னொன்று 'சிறப்பு முகாம்' என்பதாகும். சிறப்புமுகாம் எனும் பெயரில் சிறையை விடகொடிய சித்திரவதை முகாம்களாக தமிழகத்தில் பல பகுதிகளில் உள்ளக் கிளைச்சிறைகளில் (Subjails) நூற்றுக்கான அகதிகள் அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். அடிப்படை வசதிகள் ஏதுமில்லாத நிலையில், மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வருடக்கணக்கில் எவ்வித விசாரணையுமின்றி இவ்அகதிகள் வைக்கப்பட்டிருப்பது சர்வாதிகாரி ஹிட்லரின் சித்திரவதை முகாம்களை நினைவூட்டுவதாக இருக்கிறது.

கலக்டரின் நிர்வாகத்தின் கீழ்தான் சிறப்பு முகாம் இருக்கும் என்று தெரிவித்தாலும், நடை முறையில் Q-Branch போலிசு அதிகாரிகளே சிறப்பு முகாம் பொறுப்பாளராக இருக்கின்றனர்; இதனால் இங்கு அடிப்படை வசதிகள் மட்டுமல்ல, மனித உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையே காணப்படுகிறது 1997ஆம் ஆண்டு வெளிநாட்டவர்க்கான சட்டப்படியே தமிழ் அகதிகள் சிறப்பு முகாம்களில் காவலில் வைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான ஒரு சட்டத்தைக் கண்டுபிடித்து தமிழ் அகதிகளை முதன்முதலில் சிறப்பு முகாமில் அடைத்த பெருமை கலைஞர் கருணாநிதி அவர்களையே சேரும். தனது ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அப்பாவி அகதிகளைப் பிடித்து சிறப்பு முகாமில் அடைத்துவிட்டு புலிகளை அடைத்துவிட்டேன் என்றுமத்தியஅரசுக்கு கணக்கு காட்டினார். அப்போது எதிர்க்கட்சியில் வீற்றிருந்த ஜெயலலிதா அவர்கள்''பிடிக்கப்பட்டவர்கள் புலிகளல்ல; அவர்கள் அப்பாவி அகதிகள், பதவிக்கு வந்தால் அவர்களை உடனடியாக விடுதலை செய்வேன்'' என்றார். ஆனால் பதவிக்கு வந்து இவர்களை விடுதலை செய்திருந்தாலும் பரவாயில்லை. தமிழ்நாட்டில் மேலும் பல சிறப்பு முகாம்களைத் திறந்து அதில் நூற்றுக்கணக்கான அகதிகளை அடைத்து, ஈழத்தமிழ் அகதிகளைக் கொடுமைப் படுத்துவதில் கலைஞர் கருணாநிதிக்கு தானும் சளைத்தவர் அல்ல என்பதை காட்டியிருக்கின்றார்.

சிறப்பு முகாம்களில் அடைத்துவைக்கப் பட்டிருக்கும் அகதிகள் எவ்வளவு கொடுமையை அனுபவிக்கின்றனர் என்பதை விளக்க சில உதாரணங்களைக் கீழே குறிப்பிட விரும்புகிறோம்.

1) விசாரணைக் கைதிகளைக் கூட நீண்ட நாட்கள் அடைத்து வைக்கக் கூடாது எனக்கூறப்படும் கிளைச்சிறைச்சாலைகளிலேயே வருடக்கணக்காக சிறப்பு முகாம் எனும் பெயரில் தமிழ் அகதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவற்றில் நடமாடக் கூட வசதிகள் இல்லை. இந்நிலையில் நூற்றுக்கணக்கானவர்கள் நீண்ட நாட்கள் எப்படித் தங்கியிருக்க முடியும்?

2) பல சிறப்பு முகாம்களில் பாதுகாப்பைக் காரணங்காட்டி 24 மணிநேரமும் அறைகளிலேயே (Cell) அடைத்து வைக்கப் பட்டுள்ளனர். அச்சிறிய அறைக்குள்ளேயே உண்ணவேண்டும், காற்றோட்டமற்ற சுகாதாரமற்ற அச்சிறிய அறைகளில் எவ்வித பொழுது போக்குமின்றி தனிமையில் வைக்கப்பட்டிருப்பதால் அகதிகளுக்கு மனநோய் ஏற்படும் அபாயம் உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


3) தமக்கிழைக்கப்பட்டிருக்கும் கொடுமைகள் குறித்து நிவாரணம் கோரி சம்பந்தப்பட்ட அகதிகள் எவ்வளவோ மனுக்கள் அனுப்பியும் போராட்டங்கள் நடத்தியும் இதுவரை எவ்விதபயனும் கிடைக்கவில்லை. விரக்தியடைந்த அகதிகள் சிலர் தற்கொலை முயற்சியில் கூட ஈடுபட்டுள்ளதாக அறியவருகிறது.

4) சிறப்பு முகாமில் ஒரு அகதிக்கு 5 ரூபாய் வீதம் பணம் வழங்கப்படுகிறது. இதில் அரிசியைத் தவிர வேறு எந்தப் பொருளும் ரேசனில் கொடுப்பதில்லை. சமையலுக்கு விறகு மட்டுமே அனுமதிக்கப் படுகிறது. ஒரு கட்டு விறகே 3ரூபாய் விற்கும் போது 5 ரூபாவால் அனைத்துப் பொருட்களும் வாங்கி எப்படிச் சமாளிக்க முடியும்? இதனைச் சுட்டிக் காட்டி பணத்தைக் கூட்டிக் கொடுங்கள் அல்லது ஏதாவது வேலை வழங்குங்கள் அல்லது வெளியில் இருக்கும் உறவினர்களுடன் தொடர்பு கொண்டு உதவி பெற அனுமதியுங்கள் என சம்பந்தப்பட்ட ஈழஅகதிகள் கோரிக்கை வைத்தனர். ஆனால் இவை எதையுமே அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் விரக்தியடைநது வேறு வழியின்றி தங்க வேலாயுதம் என்ற அகதியும் அவரது மனைவியும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். இச்சம்பவம் 10.4.93 அன்று வேலூர் சிறப்பு முகாமில் நடைபெற்றது. தற்கொலை முயற்சியில் ஈடுபட்டவர்களுக்கு மருத்துவ மனையில் சிகிச்சையளித்த பின்பும், அரசு இரக்கம் கொளளவில்லை. ஆனால் வைத்தியம் பார்த்த மருத்துவ அதிகாரி இவர்களின் சோகக் கதையைக் கேட்டு இரக்கம் கொண்டு மனிதாபிமான ரீதியில் சிறு உதவிகளைச் செய்துள்ளார்.

5) சிறப்பு முகாம்களின் உள்ளே வைத்திய வசதிகள் எதுவுமே கிடையாது. யாருக்காவது உடல் நிலை சரியில்லையின். தாசில்தார் தொடக்கம் Q-Branch அதிகாரிகளுக்கு மனுக்கொடுத்து அனுமதிப்பெற்றால் போலிஸ் காவலுடன் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். யாருக்காவது இரவிலோ அல்லது திடீரெனவோ ஆபத்தான நிலை ஏற்பட்டால் உடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு எந்த வழியும் கிடையாது. இதனால் சிறப்பு முகாமில் ஒரு சிறு குழந்தை இறக்க வேண்டி நேரிட்டுளளது. இன்னும் எத்தனையோ... இதன் பின்னருங்கூட அரசு எவ்வித முன்னேற்பாடும் செய்யாதது ஆச்சரியமாக உள்ளது. அத்துடன் தனியார் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

6) சிறப்பு முகாம்களில் பொழுது போக்கு வசதிகிடையாது. அத்துடன் வெளித் தொடர்புகளும்துண்டிக்கப்பட்டுளளன. பத்திரிகை, T.V. ரேடியோ, எதுவுமே கிடையாது. அகதிகள் யாராவது தமது சொந்த செலவில் இவற்றை வாங்க விரும்பினாலும் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இவர்களைப் பார்வையிட நெருங்கிய உறவினர்களுக்கு மட்டுமே அனுமதியளிக்கப்படுகிறது. வேறு எவரும் பார்வையிட அனுமதியில்லை. நெருங்கிய உறவினர்களும் இவர்களைப் பார்வையிடுவதற்காக தமது படம் ஒட்டித் தாசில்தார் மற்றும் Q Branch அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும். அப்போது அநத நெருங்கிய உறவினர்கள் மீது அதிகாரிகள் நீண்ட விசாரணை நடத்துவர். இத்தகைய கெடுபிடிகளினால் ஒரு முறை பார்க்க வந்தவர் அடுத்தமுறை வருவதற்கு அஞ்சும் நிலை ஏற்படுகிறது. சிறைச்சாலைகளில் கூட வழக்கில் கைது செய்யப்பட்டவர்களை யாரும் பார்க்கலாம் என்று உயர் நீதிமன்றம்உத்தர விட்டிருக்கும் போது, சிறப்பு முகாம்களில் இவ்வாறு கடுமையான சட்டங்களை கடைப்பிடிப்பது எந்த விதத்தில் நியாயம் என்று புரிந்து கொள்ள முடியவில்லை.

7) இவ்வாறான அடக்கு முறையினால் விரக்தியடைந்த அகதிகள் தங்களைத் திருப்பி நாட்டிற்கே அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளனர். இன்னும் சிலர் தமது சொந்த செலவிலேயே நாடு திரும்ப தயாராக இருப்பதாகவும் அதற்கு அனுமதியளிக்கும்படியும் தமிழக அரசைக் கேட்டுள்ளனர். ஆனால் அரசு அவை எதற்கும் இணங்கவில்லை. அதே வேளை சிறப்பு முகாமில் உள்ள சில அகதிகள் மீது வழக்குகள் உள்ளன. இவர்களை நீதிமன்றம் ஜாமினில் விடுதலை செய்தும் வெளியில் விடாமல் கொண்டுவநது சிறப்பு முகாம்களிலேயே வைத்துள்ளனர். இவர்களை வழக்கு வாய்தாக்களுக்கு, நீதி மன்றத்திற்கு அனுப்புவதில்லை. இதனால் இவர்கள் மீது ''வாரண்ட்'' பிறப்பிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கும் நிலை ஏற்படுகிறது. அதிகாரிகளின் இத்தவறினால் இவ் அகதிகள் சிறையில் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. கொடைக்கானல் ''T. V. டவர்'' வெடிகுண்டு வழக்குத் தொடர்பாக கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்ட பாலச்சந்திரன் என்பவருக்கு 20.6.92 அன்று உயர்நீதிமன்றம் ஜாமின் வழங்கியது. ஆனால் அரசு அவரை விடுதலை செய்யாமல் வேலூர் சிறப்பு முகாமில் காவலில் வைத்துள்ளது. அங்கிருந்து

www.tamilarangam.net



அவர் கொடைக்கானல் நீதிமன்றத்திற்கு வாய்தாவிற்கு அனுப்பப்படாததால் நீதிமன்றம் இவருக்கு ''வாரண்ட்'' பிறப்பித்ததை அடுத்து இவரை மீண்டும் மதுரை மத்திய சிறையில் அடைத்தனர். இவ்வாறு அடைக்கப்பட்டது தவறு என்று சிறப்பு முகாமுக்குத் திருப்பி அனுப்பும்படியும் உயர்நீதி மன்றம் 6-11-93 அன்று உத்தரவு இட்டும் அவ்வுத்தரவு இன்னும் நிறைவேற்றப் படாமல் வைக்கப்பட்டுள்ளது.

8) சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் குடும்பத்தவர்களை பிரித்தே அடைத்து வைத்திருக்கின்றனர். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் பார்த்து பேசுவதற்கு 15 நாட்களுக்கு ஒரு முறையே அனுமதி வழங்கப்படுகிறது. வேலூர் சிறப்பு முகாமில் அவ்வாறு பிரித்துவைக்கப்பட்ட 8 குடும்பங்கள் தங்களை ஒன்றாக வைக்கும்படி கூறி சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டும் அவர்களின் கோரிக்கையை அரசு இதுவரை நிறைவேற்றவில்லை.

பொதுவாக சிறைச்சாலைகளிலேயே கொடுமைகள் நிகழ்வதாகவும் வசதிக் குறைபாடுகள் இருப்பதாகவும் அறியப்படுவதுண்டு. ஆனால் சிறப்பு முகாம் என்னும் பெயரில் சிறையில் அளிக்கப்படும் வசதிகள் கூட மறுக்கப்பட்ட நிலையில் வசதிகள் கொடுமைப்படுத்துவதுவதற்காகவே இருக்கின்றது. சிறைச்சாலைகளில் உணவுடன், சோப்பு, எண்ணெய், சீயக்காய்த்தூள் தபால் கார்டு, உடை என்பன வழங்கப்படுகின்றன. அத்துடன் பத்திரிகை, சஞ்சிகை, ரேடியோ, T V. சினிமா வசதிகளும் உண்டு. மேலும் முடிவெட்ட, துணி துவைத்து தேய்க்க டீ குடிக்க, கேன்டீன் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல வாரம் ஒரு தடவை உயர் அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், பாாவையிட்டு குறை தீர்க்கும் முறை உண்டு. அதைவிட நியாயம் பெற இலவச சட்ட உதவியும் உண்டு. ஆனால் சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் ஈழ அகதிகளுக்கு வசதிகள் எதுவுமே வழங்கப்படாததுடன் இவற்றைத் தமது சொந்த செலவில் பெற்றுக் கொள்வதற்கும் அகதிகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வேதனை தரும் இந்நிகழ்வுகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இது குறித்து இவ்வப்பாவி அகதிகளுக்கு நியாயம் பெற்றுக் கொடுக்க எதிர்க் கட்சிகளோ அல்லது மனித உரிமை அமைப்புகளோ இது வரை முன்வாாதது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகவேயுள்ளது.

*சாதாரண முகாம்கள்*

**உதவித் தொகை வழங்கல்**

1) இது வீட்டின் தலைவருக்கு ரூ 5ம் பிற உறுப்பினர்களுக்கு வயது எல்லைப்படி ரூ 4 தொடக்கம் ரூ 3 வரை குறைந்த விதத்திலேயே உண்டு. அரசின் சலுகை மட்டும் 57 பைசா/1kg அரிசி விலையைப் பார்த்தால் அரிசியின் தரம் எவ்வளவு கீழ்த்தன்மையுள்ளது என்பதை கூற வேண்டியது அவசியமில்லை. சுத்தமற்ற அரிசியும் ஆகும்.

இங்கு குறிப்பிட வேண்டியது என்னவென்றால் வழங்கப்படுகின்ற உதவித் தொகையும் சரி, அரிசியும் சரி, அதில் எந்த மாற்றமுமில்லாது வழங்குவதுதான் பெருங்கொடுமை. அகதியாக வரும்போது பதியப்பட்டப் பெயர் மற்றும் வயது இதில் வயது மட்டும் மாறாமல் தொடர்ந்து வருடங்களைக் கடந்து வருகிறது. அரிசி வழங்கும் ரேசன் அட்டையிலும் (Ration Card) உதவித்தொகை கொடுக்கும் பதிவு புத்தகத்திலும் வயதுகள் 4 வருடம் முடிகிற நிலையிலும் மாற்றப்படாமல் மக்களின் உதவித் தொகையும், ரேசன் அரிசியும் கொள்ளை அடிக்கப்பட்டே வருகிறது! மனுப் போட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டும் தங்களுக்கு மேலிடத்திலிருந்து ஆணை வரவில்லை என்று சாக்கு போக்கு செய்கின்றனர்.

மேலும் இன்றைய இந்திய நாட்டின் பொருட்களின் விலையேற்றம் எல்லாம் பேசுகிற ஒரு விடயமாகப் உள்ளது. ஈழ அகதிகளுக்கு தினம் கொடுக்கின்ற ரூபாய் ரூ 4, ரூ 5ஐ வைத்து வாழ்வை நடத்து என்று சொன்னால் நீங்களே சொல்லுங்கள் அவர்களால் வாழ முடியுமா?

2) சாதாரண முகாமில் மக்கள் முகாமை விட்டு வெளியே செல்வதானால் காலையில் 6 மணிக்கு மேல் முகாம் பதிவுப் புத்தகத்தில் கையெழுத்திட்டுவிட்டு மாலை 6 மணிக்குள் வந்து கையெழுத்து வைக்க வேண்டும். மறந்தால் கொடுக்கப்படும் உதவித்தொகையும் நிறுத்தப்படும். தொடர்ந்து எழுதாமல் சென்றால் காவல் துறையினராலும் Q-Branch துறையினராலும் பெருத்த பாதிப்புக்களை பெற்றுக் கொண்டிருக்கின்றனர். உதவித்தொகை வழங்கும் நாட்களில், யாரும் எங்கும் செல்லக் கூடாது. பிறந்த குழந்தை முதல் 90 வயது பாட்டிவரை நடந்து சென்று அதிகாரிகளுக்கு முகம் காட்ட வேண்டும் அதிகாரிகள் வயது போனவர்களை யாவது வீடுசென்று பார்ப்பார்களா என்றால் அதுவுமில்லை. உதவித் தொகை வழங்கப்படாத நாட்களிலும் இந்தத் தொல்லை தொடர்ந்து வருகிறதென்பது குறிப்பாகும். வருவாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆய்வாளர் தொடக்கம் உயர்தாசில்தார் வரையும், காவல் போலிஸ் தொடக்கம் பெரிய உயர் அதிகாரிகள் வரை லஞ்சத்திற்கு கட்டுப்பட்டவர்களாக அகதிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

3) மேலும் இம் முகாம்களில் சுகாதார வசதிகள் பெரும் வேதனைக்குரியதாகவே உள்ளது. ஈழ அகதிகள் முகாம்களில் கொலரா, மூளைக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களில் இறந்துள்ளனர். தமிழக அரசின் கிராமங்களிலும், நகரங்களிலும் தங்களுக்கு தடுப்பூசிப்போட்டுக் கொள்கிறார்கள் அவர்கள் எல்லோரும் போட்டு முடியும் தருவாயில் எத்தனை பேர் இறந்தார்கள் என்று பதிவு எடுத்துக் கொண்டு தடுப்பூசி போட வருகிறார்கள். தடுப்பூசியானாலும் சரி, வேறு நோய்களுக்கு போடுகின்ற ஊசியானாலும் சரி ஒரே ஊசி மூலமும், கொதிக்காத நீரில் கழுவிய ஊசி மூலமே மருந்து ஏற்றப்படுகிறது. மேலும் சாதாரண முகாம்களில் வாழும் தொழிலாளர் அகதிகள் வறுமை மற்றும் பணம் இன்மை காரணங்களால் அரசு மருத்துவ மனையை விட்டால் அவர்கள் வாழ்வுக்கு வழியில்லை. மேலும் முகாம் சுற்றாடல் கழிவு நீர்களாலும் அழுகிய குப்பைகளாலும் நிரம்பி நோய்களின் உற்பத்திச் சாலைகளாக மாறிவருகின்றது.

4) அகதி மாணவர்கள் தங்கள் கல்வியின் பாதிப்புக்கள் கண்டு மனம் நொந்து நடமாடும் உருவங்களாக மாறி வருகின்றனர். முகாம்களை ஆளும் அரசும் ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு அடிக்கடி மாற்றுவதால் மாறும் இடத்திலிருந்து மாற்றப்படும் இடத்திற்கு பள்ளியின் நிர்வாகம் மாற்றுச் சான்றிதழ் கிடைக்காமல் பள்ளியில் சேர முடியாமல் தமிழக அரசு மாணவர்களைத் தண்டித்து வருகின்றது. அகதி மாணவர்களுக்கு ஆரம்பம் முதல் உயர்கல்விவரை வழங்கி வந்த சலுகைகள், ஆதரவுகள் (+2) பன்னிரண்டாம் வகுப்புடன் நிறுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேருவதற்கு அனுமதி வழங்கியுள்ள போதிலும் தமிழ் நாட்டின் பள்ளி அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மைகளால் சேர்க்க முடியாமல் ஏங்கும் மாணவர்களின் பெற்றோர் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. பெரும் பான்மையான தொழிலாள அகதிகளின் மாணவர்கள் பெரும் பணத் தட்டுப்பாட்டின் மத்தியில் படிக்க வைக்க முடியாமல் உள்ளனர். பள்ளியில் மாணவர்கள் கட்டும் தொகைக்கு பெற்றோர்கள் உழைக்கும் பணம் போதவில்லை. இதனால் பெரும் பான்மையான சிறுவயது மாணவர்கள் மதுக்கடைகளுக்கும் மற்றும் கடைகளுக்கும் குறைந்த கூலியில் வேலைக்குச் செல்கின்றனர். மிட்டாய் தின்னும் பருவத்தில், காலை யெழுந்து படிக்கும் வயதில், ஏன் உழைக்கிறோம் என்ற தெரியாத வயதில் கூலியின் மதிப்பு தெரியாத மயக்கத்தில் இவர்கள் வாழ்க்கை ஓட்டப்படுகிறது. தமிழக அரசின் லாட்டரி மயக்கத்தில் இருக்கும் பெற்றோர்களையும் அதை விற்றுக்கொண்டு திரிகின்ற எமது மாணவர் சிறுவர்களையும் பார்க்கும் போது மிகுந்த வேதனையாக உள்ளது. அரசின் இந்த அக்கறையற்றத் தனங்கள் ஈழ அகதி மாணவர்களை எந்த அளவு பாதித்துள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

மேலும் பன்னிரண்டாவது படித்த மாணவர்கள் உயர்கல்வி கற்க முடியாது தவிக்கின்றனர். பணம் இருந்தால் உயர்கல்வி இல்லையேல் பாதியிலேயே கண்ணைக் கட்டி காட்டில் விட்ட கதையாகவே உள்ளனர். கல்லூரிகளில் உதவிக்கரமின்றியிருக்கும் தொழிலாளர் மாணவர்கள் நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது சில மாணவர்கள் பணத்தை காட்டி உயர்கல்வி கற்றுவருகின்றனர். அவர்களுக்கு வெளி நாடுகளிலிருந்து வருகின்ற உறவினர்களின் பணமே வழிகாட்டியாக உள்ளது. இப்படி பார்க்கும் போது 1000 மாணவர்களுக்கு ஒரு மாணவன் மட்டுமே உயர்கல்வி கற்கக் கூடியதாக உள்ளது. ஈழத் தமிழர் கல்வி இங்கும் ஒடுக்கப்பட்டு வருகிறது. படிக்கும் மாணவர்களின் சதவிகிதமும் முகாமில் குறைந்த வண்ணமாகிக் கொண்டிருக்கிறது.

5) அகதி முகாம்களில் பெண்கள் பிரச்சனை மிகுந்த அவல நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டு வருகின்றது. ஆண் துணையின்றி எந்த பெண்கள் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் கூலி வேலைக்கு செல்ல வேண்டியுள்ளது. அங்கு முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் அடிமையான கோலத்தோடு அவர்களின் இச்சைகளுக்கும், வக்கிரப் பார்வையின் பிடிக்குள்ளும் மாட்டித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியத் தொழிலாளர்களுக்கும் ஈழத் தொழிலாளர்களுக்கும் கூலி வழங்கும் ஏற்றத்தாழ்வுகளில், தாழ்வில் ஈழத் தொழிலாளர்களே என்பது தெளிவான உண்மை. அதிலும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலி வரலாறு அறிந்த காலந்தொட்டு குறைந்த வீதத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது அதில் ஈழத் தொழிலாள பெண்களும் விதிவிலக்கல்ல குறைந்த கூலியில் வாழ்வை ஓட்ட முடியாத நிலை. இந்த நிலையில் அவள் விபச்சாரத் தொழிலுக்குட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்டுவிடும் நிலை தோன்றியுள்ளது. பெண்ணின் இந்த நிலைப்பாடுகளால் மொத்த ஈழப் பெண்களும் சமூகத்தில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? பெண்கள் தங்களுடைய வாழ்வை ஓட்டுவதற்கு வேலைக்குச் சென்றால்தான் முடியும் என்பதால் குறைந்த கூலியிலும் வேலைக்குச் செல்ல வேண்டியுள்ளனர்.

முழுக்க அனுபவிக்கும் சூழ்நிலை ஏற்படுத்திவிடுகின்றது. கற்புக்குக் கறைபடக்கூடாத வரலாறுகளை, அதையே பாடங்களாய் சுமந்திருக்கும் தமிழ் நாட்டின் பெண்கள் பட்டுக் கொண்டிருக்கும் ரணங்களை எழுத்தில் கூறமுடியவில்லை.

6) அகதிகள் காவல்துறையினரோடு இருக்கும் முரண்பாடுகள் பற்றி தனியாக



பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஈழப் பெண்ணின் கல்வி, பார்க்கும் பார்வைகளாலும் பேசும் வார்த்தைகளாலும் வாழ்வை, கல்வியைக் கட்டிப் போட்டுத் தொடர முடியாதுள்ளது. மேலும் முகாம் பெண்கள் இந்தியத் திரைப்படங்களாலும், சிறந்த வாழ்க்கை வழிகாட்டுதல்கள் இல்லாததாலும் இளம் வயதுகளிலேயே தாயார்களாக மாறிவிட்டுள்ளனர். இவர்களுடைய கல்வி மற்றும் சரியான தொழில் வழிகாட்டுதல்கள் இருப்பின் இப்பிரச்சனைகளை சந்தித்திருக்க மாட்டார்கள். தன்னையே அறிய முடியாத பருவத்தில் தன் குழந்தையை அதன் எதிர்காலத்தை எப்படி அந்தப் பெண்ணால் நிர்ணயிக்க முடியும்?

முகாம்களில் இருக்கும் காவல் துறை தொட்டு அரசு அனைத்து அதிகாரிகள் வரை அகதிப்பெண்கள் விபச்சாரத்திற்குட்படுகிறார்கள். எதிர்த்தால் அல்லது யாரேனும் மறுத்தால் அவளுடைய தந்தையானாலும் சரி, கணவன் ஆனாலும் சரி, அதை எதிர்த்த சமூக சேவகனாக இருந்தாலும் சரி சிறப்பு முகாமுக்குள் தண்டனையை வாழ்நாள்

ஆராய வேண்டிய நிலைக்கு அகதிகள் இலக்காகியுள்ளனர். தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா சட்டசபையில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சமூக குற்றங்களுக்கு ஈழ அகதிகளே காரணம் என கூறிவிட்டிருக்கிறார். தமிழக காவல்துறையினரின் கற்பழிப்புத் தொட்டு கொள்ளை வரை பத்திரிகைகளும், பிற செய்தி அறிக்கைகளும் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதை யாரும் அறியாமலில்லை. காவல்துறை தொட்டு உயர் அதிகாரிகள் வரை அனுபவிக்கும் ஈழப்பெண்கள், இலஞ்சமாய் கறந்து கொண்டிருக்கும் கொள்ளைகள் என்று தொடர்ந்து கொண்டே பேசலாம். ஆனால் தமிழ் நாட்டின் சீர்குலைவிற்கு ஈழத் தமிழர் காரணமாம். உடனே இலங்கை அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டுமாம். கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் நடக்கும் போது மட்டும் ஈழஅகதிகள் இருப்பது தமிழக அரசுக்குத் தெரிகிறது. முகாம்களில் மக்களுக்குள் ஏற்படும் சில குடும்ப மற்றும் குடித்துவிட்டு ஏற்படும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிதடி சண்டைகள் வந்தால் போலீஸார் வாய்க்கு ருசி தான். அடிபடும் மக்களுக்கு தண்டனை வழங்குவதை விட்டு அவர்களிடம் லஞ்சங்களாய் ஒரு தொகைப் பெறப்பட்டு விடுகிறது. காசுகொடுக்க முடியாதவர்கள் படும் அவஸ்தைகள் சொல்லி முடியாது. ''கேஸ் கேஸ்'' என்று அவர்களை இழுத்தடித்து பாரிய தொகைகளைப்பெற்று விடுகிறது காவல் துறை. இந்த முகாம் சூழ்நிலை சம்பவங்கள் நடைபெறக் கூடிய வாய்ப்புக்கள் இருக்கச் செய்கிறது. அதற்கான தீர்வை சரியான முறையில் தீர்த்துவிடுவதில்லை.

மேலும் முகாமில் வாழும் அகதிகள் பொய்யான கேஸ்களில் தள்ளப்பட்டு வருடக்கணக்கில் சிறைவாசம் புரிகின்றார்கள். மாதக் கடைசியில் கேஸ் ஏது கிடைக்கவில்லையென்றால் அகதியில் யாரும் பிடிபட்டு உள்ளேதள்ளப்படுவர். இன்றைய இந்தியாவில் நடைபெறும் குற்றச் செயல்கள் எத்தனை எத்தனை. ஆனால் அவைகள் நீதிதேவனைப்போல் இவர்களுக்கும் கண்தெரிவதில்லை. மாதத்திற்காகவும், காவல்நிலையம் இருப்பதற்காகவும் கைதிகளாய் மக்கள் பிடிபடுகிறார்கள். இதில் தற்போதைய நடைமுறையில் ஈழத்தமிழர்கள் உள்ளனர்.




மலர் வெளியீடு : நிறப்பிரிகை

*நிறப்பிரிகை*

அஞ்சற் பெட்டி எண் 192
பாண்டிச்சேரி 605001

கிடைக்குமிடம் :

*விடியல் பதிப்பகம்*

3, மாரியம்மன் கோயில் வீதி
உப்பிலிபாளையம்
கோயம்புத்தூர் 641015



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 5 | 6 | 7 | ■ |
| 9 | ■ | 11 | 12 | 13 | ■ | 15 | 16 கா |
| 17 | 18 ம் | 19 | ■ | ■ | 22 | ■ | 24 |
| 25 | 26 | ■ | 28 | 29 | 30 | 31 | ■ |
| ■ | 34 | 35 | ■ | ■ | 38 | 39 சா | 40 |
| 41 | ■ | 43 | 44 அ | 45 | 46 | ■ | 48 |
| 49 | ■ | 51 | 52 | 53 | ■ | 55 | 56 |
| 57 | 58 | ■ | 60 | 61 | 62 | ■ | 64 |

இலக்கம் : 26

**உங்கள் பாவனைக்கு:-**

**அலுவலகப்பாவனைக்கு:-**

www.tamilarangam.net

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark.

c:30 No: 26

Afs.

www.tamilarangam.net

# சஞ்சீவி
## ஆறு மலர்களுக்கான சந்தா

| | |
|---|---|
| Switzerland<br>France<br>Italy<br>London<br>Germany | 25 U$ |
| Canada<br>Australia | 25 U$ |
| Swedan<br>Norway<br>Denmark | 125kr. |

காசோலை எடுக்கவேண்டிய கணக்கிலக்கமும், முகவரியும்:

A/C.NO.7601-408876-9
CHANCHIVE
Vestjysk Bank
7500 Holstebro,
Denmark.

காசோலை அனுப்பவேண்டிய முகவரி:

CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro,
Denmark.

"மறுக்கப்பட்டு, பழக்கமற்றுப்போனதொரு சுதந்திரமான
கருத்துப்பரிமாற்றலை உருவாக்குவதற்கு
எல்லோரது கருத்துக்களும்,
விமர்சனங்களுமே
வழிவகுக்கும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net